விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 09 சனிக்கிழமை (25.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 280

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா. செயலாளர் - ஜனாதிபதி நியூயோர்க்கில் சந்தித்து பேச்சு

## விசாரணைக்குழு குறித்தே விரிவான பேச்சு

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்தித்து கலந்துரையாடினார். இலங்கை நேரப்படி நேற்றிரவு நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மீள்குடியேற்றம், கற்றுக்கொண்ட பாடம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயல்பாடுகள், ஐ.நா. செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் பணிகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. (18ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மகிந்த - ஐ.நா. செயலர் பான் கீ மூன் சந்திப்பின் போது...

## 'தனி ஈழம்' என்ற கொள்கையை ஆதரிப்பதாக வைகோ அறிவிப்பு!



### புலிகளின் தடையை நீக்கவும் கோரிக்கை

(சென்னை)

தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் அவர்களின் தனித்தமிழ் ஈழம் என்ற கொள்கையை ஆதரிப்பதாக வைகோ தெரிவித்துள்ளார். அத்துடன் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிப்பது தொடர்பான அரசாணை குறித்து உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையில் விடுதலைப் புலிகளின் சார்பில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ ஆஜராக முடியுமா என்பது தொடர்பான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. (18ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல் ஆணையாளர் விரைவில் நியமனம்!

(கொழும்பு)

நாடாளுமன்றப் பேரவையினால் தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்படுவார் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

18-வது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் முதலில் நாடாளுமன்றப் பேரவை நிறுவப்படவுள்ளதாகவும் அதன் பின்னர் புதிய தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்படவுள்ளதாகவும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தன தெரிவித் (18ஆம் பக்கம் பார்க்க)

## முருகண்டி பிள்ளையாருக்கு அருகில் உள்ள ஹோட்டலை நிறுத்த வேண்டும்

### ஆளுநருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

(கொழும்பு)

முருகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் ஆடம்பர ஹோட்டல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக வெகுண்டு எழுந்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

ஆலயத்தின் புனிதத்தைக் கெடுக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கும் இவ்வாடம்பர (18ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி நியமனத்தில் தொடர்ந்தும் இழுபறி

### சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவரினது பிரதிநிதி தொடர்பிலான பிரச்சினையை தீர்த்தபின் பிரதம மந்திரியினதும், எதிர்க்கட்சித் தலைவரினதும் நாடாளுமன்ற சபைக்கான பிரதிநிதிகள் இருவரின் பெயரை அடுத்த வாரம் சபாநாயகர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைப்பார்.

எதிர்க் கட்சித் தலைவரும் பிரதம மந்திரியும் தத்தம் வேட்பாளர்களை தனக்கு தெரிவித்துள்ளதாக சபாநாயகர் கூறினார். எதிர்க் கட்சித் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பெயரை சபா (18ஆம் பக்கம் பார்க்க)

## O+ இரத்தத்துக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.. போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஓ+ (பொசிட்டிவ்) இரத்த வகைக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதற்கு இரத்த வகையுடைய குருதிக் கொடையாளர்கள் இரத்த வங்கிக்கு சமுகம் தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிந்துஜா கேட்டுள்ளார். (ச-2)

## எந்தவொரு பயங்கரவாதியும் இலங்கைக்குள் நுழைய முடியாது

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)


எந்தவொரு பயங்கரவாதியும் இலங்கை மண்ணை மிதிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாதென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான லஷ்கர் ஈ தொய்பா அமைப்பு இலங்கையில் பயிற்சி பெற்றுக் கொண்டதாக வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

உலகின் எந்தவொரு பயங்கரவாத அமைப்பிற்கும் இலங்கையைத் தளமாகக் கொண்டு பயிற்சி பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது. (18ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச இந்து மத பீடாதிபதியாக சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் நியமனம்



சர்வதேச இந்து மத பீடாதிபதியாக சிவஸ்ரீ சம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் தெரிவு செய்யப்பட்டார்.

கொழும்பு வெள்ளவத்தை அகில இலங்கை பிராம்மணசமாஜமான இராமகான சபாவில் ஸ்ரீவித்யா சர்வதேச இந்துமத பீட ஏற்பாட்டிலும் ஜனாதிபதி செயலக பங்களிப்புடனும் பிரம்மஸ்ரீ பா.சண்முகரட்ணசர்மா தலைமையில் நடைபெற்ற வித்யா பீடா வருடாந்த மகா சபைக் கூட்டத்தில் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய பரம்பரை வழி ஆதின குருவும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ சம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் பொதுச் சபையால் சர்வதேச இந்து மத பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந் நிகழ்வின் பிரதம அதிதிகளாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இணைப்பாளர்களான சிவஸ்ரீ பாலரவிசங்கரக் குருக்கள், பிரம்மஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபுசர்மா கௌரவ அதிதியாக இராமகான சபைச் செயலாளர் பிரம்மஸ்ரீ ந.சண்முகநாதசர்மா, விசேட அதிதியாக ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய குரு பிரகாஸ்குருக்களும் கலந்து கொண்டனர்.

மேலும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன், அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் எஸ்.தனபாலா, சமாதானப் பேரவைப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா ஆகியோர்களும் கலந்து கொண்டனர். (ச-5)

### வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின்

# 17-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 17-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று சனிக்கிழமை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியா வலைப் பந்தாட்டச் சங்கத்தினருடன் இணைந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இச் சுற்றுப் போட்டியினை ஏற்பாடு செய்து நடத்துகின்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் தாம் இணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் வலைப் பந்தாட்ட அணிகளை இச்சுற்றுப் போட்டியில் பங்கு பெறச் செய்யவுள்ளனர்.

19 வயதுக்குட்பட்ட 4 பாடசாலை அணிகளும் 17 வயதுக்குட்பட்ட 11 அணிகளும் 15 வயதுக்குட்பட்ட 25 அணிகளும் இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுகின்றன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேர்ணாட் தலைமையில் நடைபெறுகின்ற இச் சுற்றுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது தொகுதி மாணவருமான ஜனாப் ஏ. என்.சுபைர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கடந்த ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 2009, 2010 ஆம் ஆண்டுகளில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்கள் உள்வாங்கப்படாதிருந்த போதும் இவ் வருடம் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களின் பங்களிப்புடன் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

17-வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இரவு வேளை வீட்டினுள் நுழைந்த நபரை ஓட ஓட விரட்டி கத்தியால் குத்திய தந்தை

## கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் 10 வீட்டுத் திட்டத்தில் திருமணமாகாத மூன்று இளம் பெண்கள் உள்ள ஒரு வீட்டின் உள்ளே புகுவதற்கு முயற்சித்த இராணுவ வீரர் ஒருவரை வீட்டு உரிமையாளரான தந்தை ஓட ஓட விரட்டி கத்தியால் வெட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் கனகாம்பிகைக்குளம் 10 வீட்டுத் திட்டத்திலுள்ள முதலாம் இலக்க வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் அனைவரும் படுத்துறங்கிய நேரம் வீட்டிற்குள்ளே ஒருவர் புகுவதற்கு முயற்சிப்பதை அவதானித்த தந்தையார் கத்தி எடுத்துக் கொண்டு உரக்க சத்தமிட்டுக் கொண்டு குறித்த நபரை துரத்த ஆரம்பித்ததும் அந் நபர் ஓடி கல் ஒன்றின் பின்னால் ஒளித்து கொண்டு தந்தையாரைத் தாக்கியுள்ளார்.

இதன்போது சுதாகரித்துக் கொண்ட தந்தை, அந் நபரை சரமாரியாகக் கத்தியால் வெட்டியுள்ளார். இதனை சமாளிக்க முடியாத அந் நபர் தப்பியோட முயற்சித்துள்ளார்.

இதன்போது கம்பி வேலியில் குறித்த நபரின் சப்பாத்து மாட்டிக் கொண்டது. ஆயினும் சப்பாத்தை விட்டுவிட்டுத் தொடர்ச்சியான வெட்டுக் காயங்களுடன் அந் நபர் தப்பியோடி விட்டார்.

இதனைத் தொடர்ந்து அப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் குறித்த சப்பாத்தை எடுத்துக் கொண்டு சம்பவம் தொடர்பாக விசாரணை செய்தபோது அது ஒரு இராணுவ வீரர் எனத் தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் தமக்கு அறிவிக்கும்படி கூறிச் சென்றனர்.

அதேவேளை நேற்றுக் காலை உழவு இயந்திரம் ஒன்றில் காயமடைந்த இராணுவ வீரர் ஒருவரை இராணுவத்தினர் அழைத்துச் சென்றதைப் பொதுமக்கள் அவதானித்துள்ளதாக பிரதேசத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

# உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 45 லீக் அணிகளுக்கிடையில் நடந்து வந்த அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஹற்றன் லீக் அணியை எதிர்த்துப் பருத்தித்துறை லீக் அணி மோதவுள்ளது. இப் போட்டியில் வெல்லும் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும்.


பருத்தித்துறை லீக் அணி தனது முதலாவது போட்டியில் இலங்கை விமானப் படை அணியையும் மட்டக்களப்பு லீக் அணியையும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-24)

❖ ❖ ❖

(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இதில் முதல் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதவுள்ளது. மற்றொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு உடுப்பிட்டி ஜிப்ஸ் அணியை எதிர்த்து வதிரி வொம்மஸ் அணி மோதவுள்ளது. (ச-6,24)



யாழ்.பிரதேச செயலக யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியினால் பொதுக் கூட்ட நிகழ்வின்போது மாற்று ஆற்றலுடையோருக்கான வாழ்வாதார உதவியாக 5 ஆயிரம் ரூபாயையும் மீள்குடியேற்ற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு ஆடுகளையும் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் வழங்குவதையும் அருகில் சமுர்த்தி முகாமையாளர் ம.கியூமன், சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.மனோகரன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# அதிபர்களுக்கான கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறும் எனக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை இக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச)

# சட்டவிரோத மீன்பிடி 236 பேர் கைது

(கொழும்பு)

சட்டத்திற்குப் புறம்பான வகையில்மீன்பிடியில் ஈடுபட்டதாக கடந்த 6 மாதங்களில் 236 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் மீன் பெருக்கம், மீன் அடர்த்தி, கடல்முருகை கற்பாறை என்பவற்றுக்கு கேடு விளைவிக்கும் மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தியவர்கள் ஆவர். (ச-5)


GERMAN, SWISS

மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு:-

10, PALALY ROAD,

JAFFNA.

T.P. :077 1604823

(2533)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சித்த மருத்துவப் பிரிவு

அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவுக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான ஆரம்ப அறிமுக நிகழ்வு எதிர்வரும் 27.09.2010 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதால் மேற்படி அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

24.09.2010

(சி/1276)



# இன்று ஒரு தகவல்

## உயிர் மீது ஆசை

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் தன்னுடைய குழந்தையை மடியில் வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்.

அரண்மனை சேவகர்களெல்லாம் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜா அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

" இந்த உலகத்திலேயே மிகவும் பிரியமானது எது?" என்று கேட்டார்.

அங்கே நின்று கொண்டிருந்தவர்கள் இதற்குப் பதில் சொன்னார்கள்.

"மன்னா, இந்த உலகத்திலேயே மிகவும் பிரியமானது சொந்தக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சுவது தான்" என்றார்கள். இந்தப் பதிலைக் கேட்டதும் ராஜாவுக்குச் சந்தோஷம். ராஜா சிரித்து விட்டார் என்றதும் அங்கிருந்தவர்களுக்கும் சந்தோஷசம். இந்த நேரத்தில் புத்திசாலியான அமைச்சர் ஒருத்தர் அந்தப் பக்கமாக வந்தார்.

அதைப் பார்த்ததும் ராஜா அவரிடமும் இதே கேள்வியைக் கேட்டார்.

" இந்த உலகத்திலேயே மிகவும் பிரியமானது எது?" என்று கேட்டார். ராஜாவுக்கு ஐஸ்வைக்க வேண்டும் என்று அவர் நினைக்கவில்லை. மனதில் பட்டதை சொன்னார்.

" இந்த உலகத்தில் மிகவும் பிரியமானது அவரவர் உயிர் தான்" என்றார்.

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

" சரி அமைச்சரே, அதை நிரூபித்து காட்ட முடியுமா?" என்றார். மந்திரியும் சரியென்று ஒத்துக் கொண்டார்.

' இப்பொழுதே அதை நிரூபிக்க வேண்டும்' என்றார் ராஜா.

'சரி,வாருங்கள்' என்று சொல்லி எல்லோரையும் அரண்மனைத் தோட்டப் பக்கமாக அழைத்துக் கொண்டு போனார் அமைச்சர்.

அங்கே ஒரு குளம் இருந்தது. அதிலிருக்கும் தண்ணியையெல்லாம் வெளியே இறைக்கச் சொன்னார்.

இப்பொழுது குளத்தில் தண்ணியே இல்லை.

சுத்தமாக இருந்தது. ஒருத்தரை மிருகக்காட்சிசாலைக்கு போய் ஒரு தாய் குரங்கையும் குட்டியையும் பிடித்து வரச் சொன்னார். அதுவும் வந்து சேர்ந்தது. அந்தக் குரங்கு இரண்டையும் குளத்தின் மத்தியில் கொண்டு போய் விட்டு விட்டு...

குளத்துக்கு தண்ணீர் வரும் குழாயைத் திறந்து விட்டார். இப்பொழுது குளத்தில் நீரின் மட்டம் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டே வந்தது.

தாய்க்குரங்கு பார்த்தது. குட்டியைத் தூக்கி இடுப்பிலேயே வைத்துக் கொண்டது.

நீரின் மட்டம் இன்னும் அதிகமாகிவிட்டது. குட்டியைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டது. நீரின் மட்டம் இன்னும் அதிகமாகியது. கழுத்து அளவுக்கு வந்து விட்டது. குட்டிக் குரங்கைத் தூக்கி தலையின் மேல் வைத்துக்கொண்டது.

ராஜா பார்த்தார். "பார்த்தாயா... அந்தத் தாய்க்குரங்கு தன்னுடைய உயிரைவிட குட்டியைக் காப்பாற்றுவதுதான் முக்கியம் என்ற நினைக்கிறது" என்றார்.

"கொஞ்சம் பொறுங்க" என்றார் அமைச்சர். தண்ணீர் தாய்க் குரங்கின் வாய் அளவுக்கு வந்துவிட்டது. அவ்வளவுதான்! குட்டியை விட்டுவிட்டு தாய்க்குரங்கு தாவிக் கரையில் வந்து நின்றது. உடனே மற்றவர்கள், தண்ணீரில் தத்தளித்த குட்டியையும் காப்பாற்றி கரையில் கொண்டுவந்து விட்டார்கள்.

"பார்த்தீர்களா...ஒவ்வொருவருக்கும் அவரவர் உயிர் மீது தான் ஆசை" என்றார் அமைச்சர்.

ராஜாவும் அதை ஒப்புக்கொண்டார். அப்படியானால் இந்த உலகத்தில் உயிர் மீது ஆசை இல்லாதவர்கள் இல்லையா?

இருக்கிறார்கள் அது வேறுநிலை.

உயிரை வெறுப்பவர்கள் ஒரு ரகம். உயிர் மீது ஆசையில்லாமல் இருப்பவர்கள் இன்னொரு ரகம்.

காட்டில் ஒரு வேடன் அவனுக்கு சரியான பசி. ஒரு கட்டத்தில் பசி தாங்கமுடியாது மூர்ச்சையாகி கீழே விழுந்து விடுகிறான்.

விழுவதற்கு முன் வலையில் ஒரு பெண்புறாவை பிடித்து விடுகிறான். ஆண்புறா மரக்கிளையில் உட்கார்ந்திருக்கிறது. வலையில் சிக்கிக்கொண்ட பெண்புறா அதைப் பார்த்து சொல்லியது:

"இந்த வேடன் உணவுக்காக நம்மிடம் அடைக்கலம் ஆகியிருக்கிறான். அவனைக் காப்பாற்றுவது நமது கடமை. அதனால் என்னை வந்து இந்த வலையிலிருந்து விடுவித்துவிடு. நான் நெருப்பில் விழுந்து அவனுக்கு இரையாகி விடுகிறேன். அதே போல் நீயும் ஆகிவிடு" என்று சொல்லியது.

சரணாகாத ரட்சகனாகிய பகவானுக்கே உள்ள குணம் இது. இதுவெல்லாம் நமக்கு எட்டாத தூரம் சேர். அதனால் இதைப் பற்றியெல்லாம் நாம் நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். முடிந்தளவுக்கு அடுத்தவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்தால் அதுவே போதும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சியில் இந்திய உதவியுடன் 12,500 வீடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் புதிய வீடுகளை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பன்னிரெண்டாயிரத்து 500 வீடுகளை அமைப்பதற்கு எதிர்பார்ப்பதாகக் கிளிநொச்சி மாவட்டச்செயலகம் தெரிவித்துள்ளது.

போரினால் முற்றாகச் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்த வீடமைப்புத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மக்கள் களரி நாடக ஆற்றுகை

மக்கள் களரி நாடக ஆற்றுகை நிகழ்வில் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கும் இரவு 9.30 மணிக்கும் பலாலி இராணுவ முகாமில் "சரண்தாஸ்" நாடகம் 2 காட்சிகளாக மேடையேற்றப்படவுள்ளது. மேலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை அருணோதயாக் கல்லூரியிலும் 28 ஆம் திகதி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் காலை 10 மணிக்கு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான திருடன் வந்தான் என்ற நாடகமும் 11.30 மணிக்கு ஏனைய மாணவர்களுக்கான மாயப்பட்டாடை எருக்கலம்பு என்ற நாடகமும் மேடையேற்றப்படவுள்ளது. (ஸ்ரீ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை - காரைநகர் வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளுக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினால் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி தரம் ஒன்று முதல் 5 வரை கீழ்ப்பிரிவாகவும் தரம் 6 முதல் 11 வரை மத்திய பிரிவாகவும் தரம் 12 முதல் 13 வரை மேற்பிரிவாக 3 பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

"மாறிவரும் சமுதாயத்தில் முதியோரின்நிலை" என்னும் கருப்பொருளில் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவங்களை இரட்டைப்பிரதிகளில் தயாரித்து எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-19)

# இராசி பலன்

*25.09.2010*
*(புரட்டாதி 9, சனிக்கிழமை)*
*துதியை மாலை 6.09 மணிவரை*
*ரேவதி பிற்பகல் 2.30 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*இரண்டாம் புரட்டாதிச் சனி.*

**மேடம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், கனவு பலிதம் உண்டு, சுப காரியச் செலவுகள் நடைபெறும்.

**இடபம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், சிநேகிதர் சந்திப்பால் சுப விரயம் ஏற்படலாம், உத்தியோகத்தர்களுக்கு சில மாற்றங்கள் ஏற்படலாம், காலை நேரத்தில் சுப நிகழ்வுகள் இடம் பெறலாம்.

**மிதுனம்** எதிர்கால வெற்றிக்கு அடித்தளம் இடும் நாள், பிறர்பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள், வெளியூர் தொடர்புகள் ஏற்படலாம், கட்டிடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், கோபமும் அலைச்சலும் குறைவடையலாம்.

**கன்னி** உஷ்ண சம்பந்தமான உடல் நலக் குறைவு ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிக்க ஒருதடவைக்கு பல தடவைகள் முயற்சிக்காலாம், பயணங்களில் கவனம் தேவை.

**துலாம்** முன்னோர் வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரின் வருகையுண்டு, வெளியூர்த் தொடர்பால் ஆதாயம் ஏற்படும், தேக நலம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருள் வாங்குவதில் விருப்பம் காணப்படும், திருமண முயற்சி கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு** பூமியால் இலாபம் கிட்டும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும், பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறலாம், பொதுச் சேவைகளில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும்.

**கும்பம்** உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், வீண் பகை மாறும்.

**மீனம்** பணவரவு திருப்தி தரும் நாள், பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

வளவன்

# கூட்டுத்தாபனங்கள், நியமசபைகள் தனியார் துறைக்கான ஓய்வூதிய திட்டம்

(கொழும்பு)


கூட்டுத்தாபனங்கள், நியமசபைகள் தனியார் துறைக்கான ஓய்வூதியத் திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அமுல் படுத்தப்படும் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின்போது இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப் படும். மத்திய வங்கி, நிதியமைச்சு, தொழில் அமைச்சு என்பவற்றுடன் இது தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | ·90 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 |
| தக்காளி | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 70 | 60 | 60 |
| கரட் | 80 | 60 | 80 |
| பூசணி | 40 | 35 | 35 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 50 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 45 | 70 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 80 |
| போஞ்சி | 100 | -- | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 35 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 25 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டப் பயிற்சியாளர்களுக்கான மூன்று நாட்களைக் கொண்ட பயிற்சி முகாம் நேற்று முன்தினம் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தலைவர் கே. கார்த்திக் உரையாற்றுவதையும் பயிற்சி முறைகள் பற்றிய ஆவணம் ஒன்றை துடுப்பாட்ட சங்க உறுப்பினர் ஜெசேகம்சி பயிற்சியாளரிடம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை பயிற்சியாளர்களையும் அவர்களது உதவியாளர்களையும் படங்களில்காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)

## ஏழாவது ஊழி நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பொ.ஐங்கரநேசன் எழுதிய ஏழாவது ஊழி என்னும் சுற்றுச்சூழல் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் ஜி.ரி.இசற் நிறுவன மண்டபத்தில் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நூல் வெளியீட்டின் முதல் நிகழ்ச்சியாக வாத்திய இசைச் சங்கமம் இடம்பெறவுள்ளது. இவ் இசைநிகழ்வை அ.ஜெயராமன் (வயலின்), கதா வேல்மாறன் (மிருதங்கம்), கு.நக்கீரன் (புல்லாங்குழல்) ,இரா. சிவராமன் (தபேலா), ந. செல்வச்சந்திரன் (கீபோட்) ஆகியோர் வழங்கவுள்ளானர்.

தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா வழங்கவுள்ளதுடன் நூலை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டு வைப்பார்.

தொடர்ந்து கருத்துரைகளை அகவிழி ஆசிரியர் தெ.மதுசூதனன், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-4)

## அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

புலோலி தெற்கு மாலியந்திடலைச் சேர்ந்த பொன்னுத்துரை சரோசாமலர் என்பவருடைய (575801102V) எனும் இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டையும் 26/3, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர் மத்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பவாணந்தி அன்பளகேந்திரனின் (1745562) எனும் இலக்கத்தையுடைய தற்காலிக அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியால்யத்தில் பெற்றுக்கொள்ளலாம் என வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## முதியோர் தினமும் சிறுவர் தினமும்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சர்வதேச முதியோர் தினமும் சிறுவர் தினமும் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புலோலி பசுபதீஸ் வரர் ஆலய திருமண மண்டபத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களையும் முதியோருக்கான அன்பளிப்புக்களையும் பிரதம விருந்தினர் வழங்கி கௌரவிப்பா (ஸ்ரீ-4-19)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு அன்பளிப்பு பொருட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் முதலாம் திகதி கொண்டாடப் படவுள்ள சிறுவர் தினத்தைமுன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைக் பிரிவினால் அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இதில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 20 வயதிற்கு உட்பட்டவர்கள் விடுதி இல.26 இற்கு எதிர்வரும் முதலாம் திகதி காலை 8 மணிக்கு தவறாது வருகை தருமாறு யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் வைத்திய அதிகாரி என். ஜெயக்குமாரன் அறிவித்துள்ளார்.

மேலும் இவ்வன்பளிப்புப் பொருட்கள் கல்கி பகவான் பக்தர்களால் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பாந்தட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்களும் பரிசு வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள கரப்பந்தாட்ட சங்க மைதானத்தில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க தலைவர்.கே.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் இ.எஸ்.பி.நாகரட்ணம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக்கிளை பிரதம முகாமையாளர் ஏ.மகாதேவா, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜெ. ரூபசிங்கம், இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளன உதவி செயலாளர் லெப்ரினன் கேணல் மகேஸ் அபயரட்ண ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வின் இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆண்கள் பிரிவில் 'ஏ' பகுதியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

மேலும் ஆண்கள் பி பிரிவு பகுதியில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழகம் எதிர் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் அல்லது சங்கானை யூத் விளையாட்டுக் கழகம் என்பன மோதவுள்ளன. (ஸ்ரீ-4)

## கழிவுப் பொருட்களை கொட்டும் வாகனங்களின் இலக்கத்தை அறிவித்தால் உடன் நடவடிக்கை

### கோப்பாய் பிரதேசசெயலர் அறிவிப்பு

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட செம்மணி வீதியிலுள்ள வயல் கரையோரங்களில் கடந்த சில நாட்களாக வாகனங்களில் இருந்து கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் துர்நாற்றம் வீசுகின்றது.

இவ்விடயத்தில் அப்பகுதி பொதுமக்கள் கூடிய கவனமெடுத்து கழிவுப் பொருட்களைப் போடும் வாகனங்களின் இலக்கங்களை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கும், கோப்பாய் பிரதேச சபைக்கும் மற்றும் பொலிஸ் பிரிவினருக்கும் அறிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படுமென நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் சீ.எ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இப் பிரதேசத்தில் கொட்டப்பட்ட கழிவுப் பொருட்களை வலிகிழக்குப் பிரதேச சபையினர் எரித்து துப்புரவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அவ்விடத்தில் "கழிவுப் பொருட்கள் போட வேண்டாம்" என்ற அறிவுறுத்தல் பலகையும் வலிகிழக்கு பிரதேச சபையினரால் நாட்டப்பட்டது. (ஸ்ரீ-2-134)

## 60ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய றமணன் அரங்கில் சமாதான நீதவான் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வலிகிழக்கு பிரதேச சபை செயலாளர் தம்பையா நடராசா கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் ஆசியுரையை சிவஸ்ரீ க.மு. ஜெகநாதத் குருக்கள் , சிவஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக் குருக்கள்ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(ஸ்ரீ-4)

## சிறுவர் சமாதானப் பேரணி

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு உடுவில் பிரதேச செயலகம் சிறுவர் பகுதியின் அனுசரணையுடன் ஸ்ரீமுருகன் சிறுவர் கழகம் நடத்தும் "சிறுவர் உலகம் ஒளி பெற அனைத்துக் கரங்களையும் ஒன்றிணைப்போம்" எனும் சிறுவர் சமாதானப் பேரணி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை தெற்கு ஐரோப்பிய மண்டபம் முன்பாக ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)

## தேசிய மட்ட சதுரங்க சுற்றுப்போட்டியில் யாழ்.இந்து மாணவன் சாதனை

(யாழ்ப்பாணம்)



நீர்கொழும்பில் அண்மையில் நடை பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 15 , 19 வயதுப் பிரிவு மாணவர்கள் பங்குபற்றினர். இதில் 19 வயதுப் பிரிவைச் சேர்நத நகுலநாதன் லவலோஜன் என்பவர் பங்குபற்றி அனைத் துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று சதுரங்க அட்டைப் (Board Prize ) பரிசைப் பெற்றுக் கொண்டார். (ஸ்ரீ-4)

## குருதிக்கொடை முகாம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அபிவிருத்தி மன்றம் மற்றும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் அளவெட்டி கோணேஸ் மற்ஸ் அக்கடமி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் குருதிக்கொடை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அளவெட்டி மகாஜனா சபைத் திருமண மண்டபத்தில் நடைபெறும்

இவ்வுயிர் காக்கும் உன்னதமான இரத்த தானத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)




## விஞ்ஞானபீட புதுமுக மாணவர்களின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு 2009/2010 ஆம் ஆண்டிற்கான கற்கைநெறியை மேற்கொள்ளவுள்ள புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்விற்கு அனைத்து புதுமுக மாணவர்களையும் பரமேஸ்வரன் ஆலயத்தில் ஒன்றுகூடுமாறு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய செயலாளர் கே.அகிலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# பாதாள உலகக் கோஷ்டியினரை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் பாதாள உலகக் கோஷ்டியினரை அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்காக நான் தனிப்பட்ட ரீதியில் வருத்தம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் மக்களுடன் நான் நெருங்கிய தொடர் புகளை கொண்டவன். அந்த மக்களுக்கு கடந்த காலங்களில் அநீதிகள் இழைக்கப்பட்டிருந்தன. 1983 ஆம் ஆண்டு ஜுலை கலவரம் அந்த மக்களை மிக மோசமானதாக பாதித்தது.

இதன் விளைவுகளே பின்னர் நடந்த நிகழ்வுகளாகும்.

நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது.தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் பாதாள உலக கோஷ்டிகளை அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சரத்பொன்சேகா அதிகாரியாக இருக்கும் போது ஒருவரும் அவர் மீது குற்றம் சாட்டவில்லை. குற்றம் செய்து விட்டு அதிகா ரிகள் நழுவி விடுகின்றனர் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)

# பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் மூன்று முன்பள்ளிகள் திறந்து வைப்பு

(பூநகரி)

உலகதரிசன நிறுவனத்தின் நிதியுதவியுடன் பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட செம்பன்குண்டு, பள்ளிக்குடா, செட்டியார் தரைவெளி ஆகிய கிராமங்களில் புதிதாக 3 முன்பள்ளிகள் அமைக்கப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

இம் முன்பள்ளிகளை உலகதரிசன நிறுவன அதிகாரி சிறோ திறந்துவைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் ஏ.எஸ்.வசந்தகுமார், கிளிநொச்சி மாவட்ட இராணுவத்தளபதி கேணல் ஜெயசூரியா, கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

மேலும் இம்முன்பள்ளிகளினூடாக இடம் பெயர்ந்த மீள்குடியமர்ந்த மக்களின் பிள்ளைகள் கல்வியை தொடரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4-84)

# தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை யாழ். மாவட்ட பெறுபேறுகள்

### யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்

அ.அனுஷ்னன் (160), கி.கேசிகா (160), சு.சுவர்ணா (158), இ.குணதீப் (155), தி.அஸ்மிதா (155), வி.ரமணராஜ் (143), றூ.ஜெனிஸ்ரன் (143).

### யா/இருதயாக் கல்லூரி, கரவெட்டி

தே.லக்ஸ்மன் (158), க.ஜெயதர்சனா (148), எ.மேரி.புவுஸ்ரினா (147),ஞா.தில்ஷியா (143), செ.டிலக்சனா (142), செ.சசியன் (142).

### அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

யோ.ரஜீவன் (160), ச.அபிராம் (155), செ. ரவீந்திரன் (149), ச.தர்சிகன் (144), நா.சுமாலினி (142)

### யா/ஆனைப்பந்தி மெ.வி.வித்தியாலயம்

ஜெ.கிருஷிகன் (187), து.மயூரன் (155), அ.வினுஜீகா (154), நி.யனுஸ்ரன் (148), நே. டிலக்சன் (145), சி.சுஜீவன் (143), ஜெ.ஐங்கரபவன் (142)

100 புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்தவர்கள் 31 பேர்

### பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி

கு.செனமியா (172), ந.மிதுனா (170), து.தெபோதா ஜோய் (161), வே.யதீஸ்வர்யா (161), பா.ஜெயமிகிலா (160), ரி.கம்சாயினி (159), து.சுமித்தா (158), ஸ்ரீ.விதுர்சினி (153), நே.தேவாம்பிகை (152), ச.சந்தியா (150), கு.கீர்த்திகா (146), ந.லக்ஷிகா (145), ர.சங்கவி (144), கி.சர்மினி (143), மா.மயூரி (142), கு.தட்ஷாபினி (142) .

### யா/விக்னேஸ்வரா ஆரம்பப்பாடசாலை, கரவெட்டி

கெ.ரகுராஜ் (159), ப.குணாயினி (154), ப.தனோஜா (149), இ.விதுர்ஷனன் (149), கு.நிமல்ராஜ் (148), ஜீ.உஷாளினி (146).

12 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ஸ்ரீ-24)

# பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் வடபிராந்திய விவசாய அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறை நேற்று ஆரம்ப மாகி இன்று சனிக்கிழமையும் சேவாலங்கா அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக வடமாகாண அபிவிருத்தி அத்தியாவசிய சேவைகள் பொது ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக விவசாய அமைச்சின் செயலாளர் கே.ஈ.கரு ணாதிலக, சர்வதேச நிகழ்ச்சி இணைப்பாளர் கல்வின் பிக்கொற் விவசாய அபிவிருத்தி பொது ஆணையாளர் ரவீந்திர கேவா விதாரண ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-4-3)

# பதவியேற்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு சுன்னாகம் கந்தரோடையில் லயன் மகாதேவா இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 2ஆவது உப மாவட்ட ஆளுநர் எஸ்.எஸ். தங்கராசா கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக உபமாவட்ட செயலாளர் ரி.விமலேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் லயன் சீமாட்டி பூமாதேவி மகாதேவா தலைவராக பதவியேற்கவுள்ளார். (ஸ்ரீ-4-54)


SRI LANKA RED CROSS SOCIETY

## SRILANKA RED CROSS SOCIETY

*If you are proactive ,highly motivated,results oriented and ready to embark on a challenging carrier by joining the world's largest humanitarian organization- the international Red Cross and Red Crescent Movement,Please consider applying for following position in Danish Red Cross funded DRR Project .*

| POST | QUALIFICATION & EXPERIENCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| Field officer Disaster Risk Reduction(DRR)<br><br>Based in Jaffna<br><br>(01 Position) | + G.C.E.(A/L) Qualified.<br>+ 02 years working experience of working for a humanitarian aid organization.<br>+ Experience of working for the Red Cross/ Red Crescent movement is a prerequisite.<br>+ Working experience with community participatory project management methodologies is a must.<br>+ Experience of working with communities. Facilitating community meetings & community organization.<br>+ Experience of working in try ethnic bilingual environment & International working environment.<br>+ knowledge & experience in writing narrative reports. | + Participation & Leadership in VCA process to determine the need & capacities for DM interventions in each community & commitment to build capacity of other team members.<br>+ Facilitate Community ownership & participation in all stages of implementation process.<br>+ Facilitate community Meetings & School level meetings & guide the work of the Schools & communities & /or their representative committees to verify project plans.<br>+ Lists of beneficiaries & feed back on going activities to rivisions of project & ensure record of all meetings & participants lists are completed & recorded.<br>+ Regular travels to the project sites to support the community committees & School level DM Units.<br>+ Work with the SLRCS Branches to identify volunteers from the community to be trained in project implementation.<br>+ Collect & record in project specific data from all process including from meetings &discussions with the committees local Divisional government & other key stakeholders. |

**Duties applicable to all personnel**

1.Work towards the achivement of overall Red Cross goals through effective management ,lateral relations and teamwork.
2.Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities.
3.Perform other duties as assigned.
4.Respect and work within the code of conduct of the Red Cross Movement.

**Other requirements for the above positions**

High sensitivity in respect to inter cultural & ethnic deference
Good computer literacy
Fluent written & spoken English & Singalese/ Tamil
Need to be flexible & adaptive to change
Self-motivation & team player .

Red Cross Movement is an equl opportunity employer.Only short listed applicants will be called Please submit your applications to reach the below mentioned no later than 27th september 2010 to:

Please inform your contact Telephone No along with the Application.

**Branch Executive Officer,**
**SriLanka Red Cross Society- Jaffna Branch Office,**
**No.73, Kandy Road,**
**Jaffna.**

**Please indicate the post applying on the top left hand corner of the envelope.**

(C/1274)



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட யாழ் மாவட்ட கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்ட இறுதி நிகழ்வு அண்மையில் கழக மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.காங்கரா மங்கல விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் சம்பியனாகிய இளவாலை யங்கென்றிஸ் அணி வீரர்களுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் சிறப்பு விருந்தினர் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வதிரி டயமன்ஸ் அணி தலைவருக்கும் பருத்தித்துறை லீக் உபதலைவர் மா.நவநீதமணி மூன்றாம் இடத்தை பெற்ற ஊரெழு றோயல் கழக அணித்தலைவருக்கும் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் ;- கரவெட்டி செய்தியாளர்)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பயன்பாட்டை அறிவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது

## சபையில் ஆளும்கட்சி பிரதம கொறடா தெரிவிப்பு



இலங்கையில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங் களுக்குக் கிடைக்கும் நிதி எத்த கைய தேவைகளுக்காகப் பயன்படுத்தப் படுகிறது என்பது குறித்து ஆராய பொறிமுறையொன்று தேவை. இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐ.ம.சு முன்னணி எம்.பி. ரஜீவ் விஜேசிங்க வாய் மூல விடைக்காக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தலையீடு செய்வதில்லை.

இவை கம்பனி பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றுக்குக் கிடைக்கும் பணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறித்து முறையாக கண்காணிக்கப்படுவதில்லை.

இதற்கான அரச பொறிமுறை எதுவும் கிடையாது. மாற்றுக் கொள்கைக்கான நிலையம் வரி செலுத்தகிறதா என்ற தகவல் இரகசிய மாக பேணப்படுகிறது. அதனால் அது குறித்து தகவல் வெளியிட முடியாதுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# சிறைச்சாலைகளில் 25 வயதிற்கு குறைந்த 653 பேர் கைதிகளாக உள்ளனர்

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

சிறைச்சாலைகளில் 25 வயதிற்கும் குறைந்த 653 பேர் கைதிகளாக இருப்பதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த எண்ணிக்கையானது மொத்தச் சிறைக் கைதிகளில் 5.1 வீதமாகும். அத்துடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 25 வயதிற்கும் குறைந்த ஆயிரத்து 639 பேர் இருப்பதாகவும் இது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மொத்த கைதிகளில் எண்ணிக்கையில் 11.9 வீதமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வீட்டுத் தோட்டத்திற்கான பயிர்வகைகள் கையளிப்பு

ஜெயபுரம் தெற்கு பகுதியில் மீள்குடியமர்ந்து மேட்டுப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள 100 குடியிருப்பாளர்களுக்கு வீட்டுத் தோட்டத்திற்கென 26 விதமான நாற்றுக்கள் பூநகரி பிரதேச செயலக உபபணிமனையில் வைத்து சோபா நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு ஜெயபுரம் தெற்கு கிராம அலுவலர் பொ.பாலசந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதில் சோபா நிறுவன பிரதி நிதிகள் நேரில் சமூகமளித்து இப்பயிர்வகைகளை வழங்கியுள்ளனர். இவை முதற் கட்டமாக விநியோகிக்கப்பட்டதாவும் ஏணைய மக்களுக்கு 2 ஆம் கட்டமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-84)

# பொன்சேகாவின் விடுதலைக்கு போராடினால் தமிழினிக்காகவும் போராடவேண்டும்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

சரத் பொன்சேகாவின் விடுதலைக்காகப் போராடினால் தமிழினிக்காகவும் போராடவேண்டும் என இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகாவின் விடுதலைக்கான அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு போரடப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த நிலையில் உங்களது கட்சியும் அதில் இணைந்து கொள்ளுமா என எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் வழங்கிய அவர் அரசியல் கைதி விடுதலைக்காக போராடினால் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டும் என போராடினால் தமிழினி விடுதலைக்காகவும் ஏனையவர்களுக்காகவும் போராடவேண்டும் என குறிப்பிட்டார்.

18 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம், அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினை என்ற மூன்று கோரிக்கைகளே அவையாகும் என அவர் குறிப்பிட்டார்.

அரசியல் கைதிகளின் விடுதலை என்கின்ற போது பொன்சேகாவும் அரசியல் கைதிதான் தமிழினியும் அரசியல் கைதி தான். எனவே அவரின் விடுதலைக்காகவும் போராட வேண்டும் எனவும் தமிழினி தொடர்பில் இதுவரையிலும் குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிட்ட அவர் முன்னாள் போராளிகள் சிலரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் அரச சுகபோகங்களில் வாழ்வதாக குறிப்பிட்ட அவர் புலிகள் அமைப்பில் எடுபிடி வேலை செய்துகொண்டிருந்த சிலரை அரசாங்கம் விசாரணைகள் இன்றி அடைத்து வைத்திருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

சரத்பொன்சேகா போன்ற அரசியல் கைதிகளே இவர்களும் என குறிப்பிட்ட கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன இவர்களது விடுதலைக்காகவும் போராடப்போவதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)


# மோட்டார் சைக்கிள் - ஆட்டோ விபத்தில் தம்பதியர் படுகாயம்

வல்லிபுர கோவில் தீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் விபத்தில் தம்பதியர் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் இடம்பெற்றது.

இதில் வல்லிபுர ஆழ்வார் தீர்த்த உற்சவத் திருவிழாவில் கலந்து கொண்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய அல்வாய் மேற்கைச் சேர்ந்த மு.வன்னிய சிங்கம் (வயது 61), வ.புஸ்பராணி (வயது 60) ஆகியோரே படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மு.வன்னியசிங்கம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஸ்ரீ-2-24)



சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினால் தந்தையை இழந்த மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கான மாதாந்த நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் உரையாற்றுவதையும் சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவானந்தம் மாணவி ஒருவருக்கு கல்விக்கான நிதியை வழங்குவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- சாவகச்சேரி செய்தியாளர் )

# ஏகாதச ருத்திரஹோமம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைசிவன் ஆலயத்தில் ஏகாதச ருத்திர ஹோமம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள் ளது.

இதில் அன்றைய தினம் காலை 6.30 மணிமுதல் 12 மணிவரை பொன்னம்பல வாணப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் பூஜை ருத்திர பாராயணமும் 11 குருமார்களால் ஹோமமும் நடைபெறவுள்ளன.

இவ் வைபவத்தில் அடியாவர்கள் அனைவரும் கலந்துகொண்டு தரிசித்துய்யுமாறு ஆலய குரு நா.சர்வேஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# தமிழில் கருமமாற்றக்கூடிய 593 பொலிஸார் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மொழியில் நன்கு கருமமாற்றக்கூடிய 593 பொலிஸார் வடக்கு, கிழக்கு மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படுபடுவர் என்று பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

தமிழ் மொழியை நன்றாக எழுத, வாசிக்க மற்றும் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய வகையில் ஐந்து மாத கால கற்கை நெறியை முடித்துக்கொண்டு இவ்வாண்டு டிசம்பரில் 593 பொலிஸார் வெளியேற உள்ளதாகவும் இவர்கள் உடனடியாக மேற்படி பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் கூறினார்.

தமிழ்மொழியில் நன்கு கருமமாற்றக்கூடிய வகையில் வருடமொன்றுக்கு ஆயிரத்து 200 பொலிஸார் என்ற அடிப்படையில் ஐந்தாண்டு காலத்திற்குள் ஆறாயிரம் பொலிஸார் பயிற்றுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். பொலிஸ் திணைக்களம் முன்னெடுத்து வரும் செற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் காலை பொலிஸ் தலைமையகத்திலுள்ள பொலிஸ்மா அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஷுஹலுகல்ல கலந்துகொண்ட இந்த மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் மேலும் கூறுகையில்,

பொலிஸார் மத்தியில் தொழில்சார் வளர்ச்சியை மேம்படுத்த பொலிஸ் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. ஜனாதிபதியினதும் பாதுகாப்புச் செயலாளரினதும் ஆலோசனைக்கமைய இதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பொலிஸாரை தேர்ச்சியடையச் செய்வதுடன் அவர்களுக்குத் தேவையான துறைசார் பயிற்சிகளையும் கற்கைகளையும் வழங்குவதே எனது பிரதான குறிக்கோளாகும்.

விசேடமாக வடக்கு,கிழக்கு பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில் தற்போது பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டும் செயற்பட்டும் வருகின்றன.


இந்த மாகாணங்களில் வாழும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்ற பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.இந்த அடிப்படையில் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறுபவர்கள் விரைவில் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

களுத்துறை, அனுராதபுரம், வவுனியா மட்டு கல்லடி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஆகிய பொலிஸ் பயிற்சி நிலையங்களில் வருடம் தோறும் ஆயிரத்து 200 பேர் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

புதிய பொலிஸ் நிலையங்கள் அதே வேளை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸ் நிலையங்களின் நிர்மாணப் பணிகள் அடுத்த மாத இறுதியில் முடிவுறும். எதிர்வரும் நவம்பர் மாத ஆரம்ப பகுதியில் இந்த இரு பொலிஸ் நிலையங்களும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இது தவிர யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு, மல்லாவி, ஒட்டுசுட்டான், பியகம, இரத்தினபுரி, தியத்தலாவ, மொறவெவ மற்றும் வெலிப்பன்ன ஆகிய பகுதிகளில் புதிதாக பொலிஸ் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் பொலிஸ் நிலையங்களை புனரமைக்கத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் தமிழ் முஸ்லிம்களை பொலிஸ் இணைத்து அவர்களுக்குத் தேவையான உரிய பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)




# எமக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை....?

வலிகாமம் மேற்கில் எமது பல்லசுட்டி கிராமம் அமைந்துள்ளது. எமது கிராமத்திலே சுமார் 160 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் பல்வேறு தேவைகள் இன்னும் நிறைவேற்றப்படாமலே உள்ளன. இந்நிலைமை மாற வேண்டும். எமது கிராமத்திலே சில அவசர திருத்த வேலைகள் உள்ளன. ஆகவே எமது தேவைகளை நிவர்த்தி செய்து தருவார்கள் என்ற மன நம்பிக்கையுடன் இம்மடலை சமர்ப்பிக்கின்றோம்.

இதில் முதலாவதாக எமது கிராமத்திலே இதுவரை காலமும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக குடிப்பதற்கு நன்னீர் இல்லாமல் ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று நீரை எடுத்து பருகி வருகின்றோம்.

அடுத்த கட்டமாக எமது வீதிகள் அனைத்தும் பல வருடங்களாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக உள்ளது. மழை காலமென்றால் ஒரு முழத்திற்கு மேலாக வெள்ளம் தேங்கி நிற்கும்.அரச உத்தியோகத்தர்கள் சில வேளைகளில் எமது கிராமத்திற்கு வரும்போது தாம் வரும் வாகனத்தை எங்கேயாவது ஓர் இடத்தில் நிறுத்திவிட்டுத்தான் வருவார்கள். பொலிஸார் ஏதாவது பிரச்சினை என்று வரும்வேளையில் ஒருவர் மோட்டார் சைக்கிளில் செல்வார். மற்றவர் இறங்கி நடப்பார். இப்படியான வீதிதான் எமது கிராமத்தின் வீதிகள்.

மூன்றாவதாக எமது கிராமத்திலே மின்சாரம் அரைகுறையாக கிடைத்துள்ளது. அப்படியிருக்கும் வேளையிலே ஒரு சிலர் 10 ஆயிரம் ரூபா பணம் செலுத்தி மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர். பணம் இல்லாதோர் மின்சாரம் இன்றி படிப்பதற்கு மாணவர்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

மேலும் எமது கிராமத்தில் வீடுகள் சரிவர திருத்தப்படாத நிலையில் அரைகுறையாகக் காணப்படுகின்றது. எத்தனையோ குடும்பங்கள் ஓலை வீட்டில் வசித்து வருகிறார்கள். மழை காலமென்றால் அவ்வீடுகள் ஊறி சிதம்பிவிடும். மாலையில் உறங்குவதென்றால் அயல்வீட்டிற்கு செல்ல வேண்டியுள்ளது.

எமது கிராமத்தில் சுமார் 20 குடும்பங்கள் வரை நிலவசதி இல்லாமல் ஒரு வீட்டில் இரண்டு குடும்பமும் மூன்று குடும்பமுமாக வாழ்கின்றார்கள். ஆகவே, எமது கிராமத்தில் சுமார் 2 ஏக்கர் காணி அயல் கிராமவாசிகளின் பெயரில் உள்ளன. நாம் போய் விலை கேட்டால் அதை விற்கமாட்டோம் எனக் கூறுகிறார்கள். எமது கருத்துக்களை அரச உத்தியோகத்தர்கள் கவனத்தில் எடுத்து எமது கிராமத்தைப் பார்வைசெய்து எமது மக்களின் மனங்களில் கண்ணீர் இல்லாமல் ஆனந்தம் பொங்கச்செய்ய வேண்டும். தண்ணீர் வேண்டும் என்று கூறி இச்சிறிய மடலை முடிக்கின்றோம்.

**கிராமத்து மக்கள் சார்பாக**
**காந்திஜி சனசமூக நிலையத்தினர்,**
**பல்லசுட்டி,சங்கானை.**

# சீரற்ற பாதையால் மக்கள் அவலம்

பருத்தித்துறை பெரியதம்பிரான் முருகன் ஆலயத்தின் அருகாமையில் உள்ள கந்தப்பு வளவு வீதி, அல்வாய் வடக்கு எனும் முகவரியிலுள்ள இப்பாதை மிகவும் மோசமான நிலையில் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளது. இப்பாதையில் சுமார் ஐம்பது வருட காலமாக எவ்வித திருத்த வேலைகளும் இடம்பெறவில்லை.

தற்போது மழை காலத்தில் இப்பாதையால் போக்குவரத்து செய்வது மிகவும் கஸ்டமாகவும், வேதனையாகவும் உள்ளது. இதுபற்றி உரிய இடங்களிற்கு கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பல தடவைகள் உரிய இடங்களுக்கு அறிவித்தும் இதுவரை காலமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமையிட்டு மனம் வருந்துகின்றோம்.

இந் நிலைமையினை மீண்டும் யாழ். அரசாங்க அதிபருக்கு அறியத் தருவதோடு இதற்கான நடவடிக்கையை தாங்கள் பெரும் உதவியாகக் கருதி இதனை உடன் புனரமைத்து தருமாறு மிகவும் அன்புடனும் தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கள் பாதையை நேரில் வந்து பார்வையிட்டால் எங்கள் நிலை தாங்கள் அறிவீர்கள். இவ் உதவியைச் செய்து தருவீர்கள் என்று மிகவும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றோம்.

**தலைவர்**
**சி.கணேசமூர்த்தி**
**பெரியதம்பிரான் முருகன் ஆலயம்**
**பருத்தித்துறை.**

# ஜனாதிபதியின் ஐ.நா.உரை தகவல்களை ஏற்றுக்கொள்ள முடியாது -ஐ.தே.க

(கொழும்பு)

ஜனாதபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரையின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையில் வறுமையொழிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள போதிலும் இதன் உண்மை என்னவெனில் வறுமை ஒழிக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு அதிக முனைப்புக் காட்டப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தனிநபர் தலா வருமானத்தின் அடிப்படையில் நாட்டின் வறுமை நிலை கணிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டின் 15 வீத புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பணவீக்க நிலைமைகள் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரம் ஆகியன தொடர்பில் கவனம் செலுத்தப்பட வில்லை எனவும் இந்த அனைத்து காரணி களையும் கருத்திற்கொண்டு வறுமை நிலைமை கணிக்கப்பட்டால் இலங்கையின் அதிகளவு வறியவர்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்படும் என அவர் தெரிவித் துள்ளார்.

குறைபோசாக்கு நிலைமையுடன் அதிகளவானோர் காணப்படுவதாகவும், நாள் ஒன்றுக்கு இரண்டு அமெரிக்க டொலர்களையேனும் வருமானமாக ஈட்ட முடியாதவர்கள் பலர் நாட்டில் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)



யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் குழுமத்தின் வெளியீடான இந்துவிஷன் உத்தியோகபூர்வ சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நேற்று யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.குழுமத்தின் தலைவர் நா.உலகநாதன் மேற்குறித்த சஞ்சிகையை கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவிடம் கையளிப்பதையும் அருகில் சஞ்சிகையின் ஆசிரியர்களான லோ.துஷிகரன், செ.தேவரஞ்சன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

12-V



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாடல்நோயை எங்ஙனம் முகாமைத்துவப்படுத்துவது?**

வருமுன் காப்பதே எந்தவிதமான நோய்க்கும் சிறந்தது. அதேவேளையில் நோய்த் தொற்று ஏற்பட்டுவிட்டால் அதற்கு விரைந்து பரிகாரம் தேடுவது அவசியம். இங்கே நோய்க்காரணிகளான பியூசேரியம் பூஞ்சணமும் பக்ரீறியாவும் நோய்த் தொற்று ஏற்படுத்த உதவியாக இருக்கும் பூச்சிபீடைகள் மற்றும் விலாங்குப் புழுக்களின் சேதத்தை தவிர்க்கவேண்டும். இதற்காக பயிரினை நல்ல முறையில் பராமரித்து வருவது அவசியம்.

நோயின் அறிகுறி காணப்பட்டால் அந்தப் பகுதியிலிருந்து நீர் ஏனைய பாதிப்புறாத பகுதிக்கு செல்லவிடாது தடுக்க வேண்டும். நீரின் மூலமாக பூஞ்சணமும் பக்ரீறியாவும் இலகுவில் பரவலடைந்து விடும்.

பியூசேரியம் பூஞ்சணத்தை கட்டுப்படுத்த தயோபனேற்று மீதைல் 50% மற்றும் திராம் 80% போன்ற பூஞ்சண நாசினிகள் உதவினாலும் அதனால் ஆரம்ப வாடலையே குணமாக்கமுடியும். விளைநிலம் அளவுக்கு அதிகமான ஈரலிப்பு உடையதாகவும் இருக்கக்கூடாது.

குறிப்பாக நன்றாக உக்கிய கூட்டுரத்தையே இடுதல் வேண்டும். நன்றாக உக்காத கூட்டுரைத்தை இடுவதனால் காற்றின்றிய சுவாசத்தினை ஊக்குவிப்பதாக அமைந்து விடும். இது மிளகாய் பயிரின் வேருக்கு நல்லதல்ல. வேர் மயிர்களினளவும் எண்ணிக்கையும் குறையத் தொடங்கும். பூக்கும் காலத்திலோ அன்றி காய் பிடித்தி ருக்கும் காலத்திலோ வாடல் நோய் ஏற்பட் டால் இழப்பு மிக அதிகம்.

வாடல் நோயேற்பட்ட விளைநிலத்தில் அது ஆரம்ப நிலை எனின் பாதிப்புற்ற பயிரை வேருடன் பிடுங்கி எரித்துவிடுவதும் நல்லது. இந்த இடத்திலிருந்து. நாற்றுக்கள் எடுப்பதையோ ஒரே விவசாய உபகரணங்களைப் பயன்படுத்துவதையோ தவிர்க்க வேண்டும்.

மிகவும் அவதானமாக செயற்பட்டாலேயே இந்நோயை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். ஒருமுறை விளைநிலத்தில் வாடல் நோய் ஏற்பட்டிருந்தால் அதே குடும்ப பயிரை தொடர்ந்தும் விளைவிப்பதை தவிர்ப்பது என்றுமே நல்லது. இது நோய்க்காரணி மண்ணினுள் பெருகி நிலை கொள்வதை தவிர்க்க உதவும்.

மிளகாய்க்கு பதில் ஒரு வித்திலை பயிர்களான குரக்கன், சோளம், இறுங்கு இவற்றைப் பயிரிடலாம்.

இந்த மாதிரியாக பயிர் வாடுவதும் பின் பழைய நிலைக்கு வருவதுமாக ஆரம்பத்தில் இருக்கும். குறிப்பாக காலை, மாலை மற்றும் இரவு வேளைகளில் ஆவியுயிர்ப்பு குறைவாக நடப்பதனால் நீரின்தேவை அதிகம் இல்லாததனாலும் பயிர் பழைய நிலைமைக்குத் திரும்பும். மதிய நேரங்களின் சூரிய வெப்பத்தி னால் ஆவியுயிர்ப்பு அதிகரிக்க வேரினூடாக உள்ளே வரும் நீர் கலன் கட்டிலுள்ள குழாய்களின் அடைப்பினால் தடைப்பட பயிர் வாடும்.

இப் படி ஆரம்பத்தில் சிறிது நாட்களுக்கு இருக்கும். உட்புகுந்த பூஞ்சணம் வளர அதிக எண்ணிக்கையில் வித்திகளையும் உற்பத்தி செய்ய வாடல் நிரந்தரமாகி விடும்.



*பியூசேரியம் பூஞ்சணத்தினால் ஏற்படும் வாடல் சிறிது சிறிதாகவே தீவிர தன்மையை அடையும்.*

*இதனை கவனமாக அவதானித்தல் இலகுவில் இனங்கண்டு கொள்ளலாம்.*

**பக்ரீறியாவினால் ஏற்படும் வாடல்**

இன்னொரு வகை வாடல் றல்சோனியா சொலனேசியாறம் (Ralsonia solanacearum) என்னும் பக்ரீறியாவினாலும் சொலனேசியே குடும்ப பயிர்களில் ஏற்பட வாய்ப்புண்டு. இங்கேயும் இவ்வாறான பக்ரீறியா பயிரினுள் உட்செல்ல ஏதாவ தொரு காயமடைந்த பகுதி அவசியம். காயமென்னும்போது வழமையான பயிர்ச் செய்கை நடவடிக்கையின் போது வேர்ப்பகுதி பயன்படுத்தும் இயந்திரங்களால் பாதிப்புற வாய்ப்புண்டு. இதைவிட வேர்ப்பகுதியில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி மற்றும் விலாங்குப்புழு பீடைகளினாலும் இப் பக்ரீறியா உட்புக வாய்ப்புண்டு. தப்பித்தவறி உட்செல்ல வழி கிடைத்து விட்டால் அவ்வளவு தான் பக்ரீறியா திடுதிப்பென ஓரிரவில் பலநூறாக விருத்திய டைந்து மேலே குறிப்பிட்டது போன்று வேரிலிருந்து நீர்மேல்நோக்கி கடத்தப்படும் குழாய்களனைத்துமே அடைத்துவிட பயிர் உடனடியாக வாடத் தொடங்கும். இங்கே வாடல் நிரந்தரமானதாக இருப்பதனால் இந்த வாடலால் பாதிக்கப்பட்ட பயிரை இலகுவில் மீளப் பெற முடியாது. இழந்தது இழந்தது தான். *இதுவே பூஞ்சண வாடலையும் பக்ரீறியா வாடலையும் வேறு பிரித்தறிய உதவிடும்.* (தொடரும்)

# அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச பாராளுமன்றில் முறையிடுவோம்

## ஐ.தே.க.உறுதிபடத் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் இலங்கையில் நடைபெறுகின்ற ஜனநாயக விரோதச் செயற்பாடு களுக்கு எதிராக ஜெனீவாவில் அமைந்துள்ள சர்வதேச பாராளுமன்றப் பேரவையின் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழுவில் எதிர்வரும் இரண்டாம் திகதி முன்னாள் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகாவிற்கு எதிரான பழிவாங்கல்கள் தொடர்பான காரணிகள் குறித்து விளக்கமளிக்கப்படும். இதனை யாரும் இலங்கைக்கு எதிரான செயற்பாடாக கூறமுடியாது. பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் ஐ.தே.க. நாட்டில் நடைபெறுகின்ற அசாதாரணமான செயற்பாடுகளுக்கு எதிராக உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியிலும் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கூறுகையில்,

கடந்த 18 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடி இலங்கையில் நடைபெறுகின்ற அரசியல் பழிவாங்கல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுத்தது. இதன்போது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிரான தீர்ப்பு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

எனவே இவ்வாறு நாட்டில் நடைபெறுகின்ற அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியிலும் நடவடிக்கைகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் எதிர்வரும் முதலாம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள சர்வதேச பாராளுமன்ற பேரவையில் இலங்கையில் நடைபெறுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான அரசியல் பழி வாங்கல்கள் குறித்து முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

149 நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கும் மேற்படி பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் ஐ.நா.விலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மங்கள சமரவீரவின் கட்சி , ஜே.வி.பி.உட்பட பல அரசியல் கட்சிகளும் அரசாங்கத்தினால் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப் பட்டன.

1989 ஆம் ஆண்டில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் வைத்து இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஜெனீவாவில் மாத்திரமல்ல, சர்வதேசத்தில் எங்கு வேண்டுமென்றாலும் சென்று முறையிடுவேன் எனக் கூறினார். எனவே தற்போது அவரின் ஆட்சியின் கீழ் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசத்தில் முறையிட எமக்கு உரிமையுண்டு.

இலங்கை சர்வதேச மனித உரிமை கொள்கைகளுக்கு கட்டுப்பட்டுள்ளது. எனவே, ஜெனீவாவில் நாம் சென்று முறைப்பாடு செய்வதை யாரும் குறை கூற முடியாது. இன்று சர்வதேசத்தில் வாழுகின்ற இலங்கையர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தியடைந்துள்ளனர்.

குறிப்பாக சரத்பொன்சேகாவிற்கு எதிரான தீர்ப்புக் குறித்து சர்வதேச நாடுகளில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்கின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக பொதுவான சக்தியாக மக்கள் மாறி வருகின்றனர். எனவே வைராக்கியமான பழிவாங்கும் அரசியலிலிருந்து அரசாங்கம் விடுபட வேண்டும் எனக் கூறினார். (ஸ்ரீ)

# அடுத்தமாதம் முதல் வீடமைப்பு கடனுக்கான வட்டி குறைப்பு


(கொழும்பு)

அடுத்தமாதம் முதல் வீடமைப்பு கடன், கடனட்டை, முற்பணம் மற்றும் ஏனைய கடன் முற்பணம் மீதான வட்டிவீதங்கள் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி அனைத்து வங்கிகளையும் கேட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின்படி வீடமைப்பு கடன் மீதான வருடாந்த வட்டி 14 சதவீதமாகவும் கடனட்டை முற்பணங்கள் மீதான வருடாந்த வட்டி 24 சதவீதமாகவும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வருடாந்த வட்டி 1-2 சதவீதமாக குறையும் வகையிலும் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து வங்கிகளையும் மத்திய வங்கி கேட்டுக்கொண்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ புலிகளுடன் தொடர்புகளை பேணினார்

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



நுகர்வோர் விவகார அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக ஜன நாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை படுகொலை செய்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் தீட்டிய சதித் திட்டத்தில் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு பங்கிருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு நபரின் குற்றச்சாட்டிற்கு அமைவாகவே இராணுவ நீதிமன்றம் தமக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.இராணுவ நீதிமன்றின் தீர்ப்பிற்கு எதிராக சரத் பொன்சேகா செய்துள்ள மேன்முறையீட்டில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றினால் சமர்பிக்கப்பட்ட சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதற்கு தமக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை எனவும் இதன் காரணமாக தமது பக்க நியாயங்களை இராணுவ நீதிமன்றில் முன்வைப்பதற்கான சாத்தியம் கிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலவசமாக வழங்கப்படும் மருந்து பொருட்களில் விலை குறிப்பிடப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

அரசாங்க வைத்தியசாலைகளில் இலவச மாக வழங்கப்படும் தடுப்பூசிகள் மற்றும் ஏனைய மருந்துப் பொருட்களில் விலை குறிப்பிடப்பட உள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய இரத்த வங்கி கேட்போர் கூடத்தில் மாகாண சுகாதார அமைச்சர்களுக்கான மாநா ட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத் தினால் வழங்கப்படும் இலவச சுகாதார வசதி களின் பெறுமதியை நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கான இந்த புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் நாட்டின் சகல அரசாங்க வைத்திய சாலைகளிலும் விநியோகம் செய்யப்படும் மருந்து பொருட்களில் விலை குறிப்பிடப்பட வேண்டும்.இந்த நடவடிக்கையின் மூலம் வீண் விரயத்தை தடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார். மேலும் மருந்துப்பொருட்களை சரியான முறையில் நிர்வாகம் செய்யாத காரணத் தினால் அரசாங்கத்திற்கு பாரியளவு நட்டம் ஏற்படுவதாகவும் அரசாங்க வைத் தியசாலைகளில் வழங்கப்படும் சகல வித மான மருத்துவ சேவைகளுக்கும் விலை நிர் ணயம் செய்யப்பட்டு இலவசமாக வழங்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

# இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு உண்மைத்தன்மையுள்ளதாக இருக்கவேண்டும்

## அயர்லாந்து பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கை அரசாங்கம் அமைத்துள்ள இனங்களுக்கு இடையிலான நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் விசாரணைக்குழு அதிக உண்மைத்தன்மை. உள்ளதாக இருத்தல் வேண்டும் என கடந்த 17 ஆம் திகதி ஜெனி வாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவில் இடம் பெற்ற மனித உரிமை நிலவரம் தொடர்பான கருத்தரங்கில் உரைநிகழ்த்திய அயர்லாந்து பிரதிநிதி ஜீர் ஜோபேர்க் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் கார ணிகளை கண்டறிந்து அதற்கான தீர்வை காண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அரசு அமைத் துள்ள இனங்களுக்கு இடையிலான இணக் கப்பாடுகளை ஏற்படுத்தும் குழு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றி யத்தின் சார்பில் பேசிய பெல்ஜியத்தை சேர்ந்த அலக்ஸ் வன் மூவேன் தெரிவித்துள் ளார்.

போரின் இறுதி நாட்களில் இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் அரசு விசாரணைகளை மேற்கொள்வது அவசியமானது என ஜப்பான் பிரதிநிதி சினிசி கிராஜிமா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



பருத்தித்துறை மத்தியஸ்தசபை உறுப்பினர்கள் 13 பேர் கடந்த 16 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இருப்பவர்கள் இடமிருந்து சி. கார்த்திகேசு (உறுப்பினர்) , பா.லிங்க மூர்த்தி (உறுப்பினர்),செல்வி கே.மீரா (நீதிமன்றப் பதிவாளர்), திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்(மாவட்ட நீதிபதி), ஆ.வடிவேலு( தவிசாளர்), கோ.செல்வநாயகம்(உறுப்பினர்), சோ.கணேசமூர்த்தி ஐயர் (உறுப்பினர்).

நிற்பவர்கள் இடமிருந்து தூயவன்(நீதிமன்ற ஆராய்ச்சி), காசிம் (நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர்), ப.சிவசுப்பிரமணியம் (உறுப்பினர்), சோ.குமரதாசன் (உறுப்பினர்), ச.பரஞ்சோதி (உறுப்பினர்), திருமதி.ஸ்ரீ.இரதிதேவி (உறுப்பினர்), நா.முத்துக்கிருஷ்ணன் (உறுப்பினர்), சு.சிறிஸ்கந்தராசா (உறுப்பினர்), வே.விசுவலிங்கம் (உறுப்பினர்), ந.குணசீலன் (உபதவிசாளர்), விக்கினராசா(நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர்). (படங்கள் :- அல்வாய் செய்தியாளர்)

# 25.09.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1513 - ஸ்பானிய நாடுகாண் பயணி பாஸ்கோ நூனியெத் தே பால்போவா பசிபிக் பெருங்கடலை முதன் முதலில் கண்ட ஐரோப்பியர்.
- 1846 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் சாச்செரி டெய்வர் தலைமையில் மெச்சிக்கோவின் மொண்டெரே நகரைக் கைப்பற்றினர்.
- 1950 - தென் கொரியாவின் தலைநகரம் சியோல் ஐ.நா கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 1957 - ஐக்கிய அமெரிக்காவில் ஆர்கன்சஸ் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9 கறுப்பின மாணவர்கள் 300 இராணுவத்தினர்களின் பாதுகாப்புடன் பாடசாலை சென்றனர்.
- 1962 - அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1978 - கலிபோர்னியாவில் சான்டியாகோ நகரில் இரண்டு விமானங்கள் மோதிக்கொண்டதில் 144 பயணிகள் கொல்லப்பட்டனர்.
- 1983 - வட அயர்லாந்தில் 38 ஐரியக் குடியரசு இராணுவக் கைதிகள் சிறையை உடைத்து தப்பினர்.
- 2002 - குஜராத் மாநிலத்தில் இந்துக் கோயில் ஒன்றில் இடம்பெற்ற வன்முறையில் 32 பேர் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1899 - உடுமலை நாராயணகவி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் (இ. 1981)
- 1968 - வில் ஸ்மித், அமெரிக்க ராப் இசைப் பாடகர் .
- 1976 - சான்சி பிலப்ஸ், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

- 1978 - ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை (பி. 1923)
- 1986 - நிக்கலாய் செமியோனோவ், ரஷ்ய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1896)
- 2003 - எட்வர்ட் செயிட், ஆங்கில ஒப்பாய்வுத்துறை அறிஞர் (பி. 1935)

## சிறப்பு நாள்

- மொசாம்பிக் - பாதுகாப்புப் படையினர் தினம்.

1959-இலங்கையின் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சோமராம தேரர் என்ற புத்த பிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து அடுத்த நாள் 26 ஆம் திகதி மரணமானார்.



# ஈழத்தவர் வரலாறு

46

## 7.வன்னிச் சிற்றரசுகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

**பண்டாரவன்னியன்**

வன்னியரசுகளின் இறுதிச் சிற்றரசனாகக் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன் என்பான் விளங்கியுள்ளான். வன்னிநாட்டின் சுதந்திரத்திற்காக இறுதிவரை போராடிமடிந்தவன் என்ற பெரும்புகழ் இவனுக்குண்டு. பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப்பகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்தான்.

ஒல்லாந்தருக்கோ ஆங்கிலேயர் ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்தான். ஒல்லாந்தருக்கோ ஆங்கிலேயருக்கோ அடங்கித் திறைசெலுத்தி வாழப் பண்டாரவன்னியன்



வவுனியா கச்சேரிக்கு முன்பாக அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலை

உடன்படவில்லை. ஒருதடவை ஒல்லாந்த ஆள்பதி தங்களுக்குத் திறையாகச் சாயவேர் தரவேண்டுமெனக் கேட்டபோது பண்டாரவன்னியன் அந்தப் பணிப்பை நிராகரித்துள்ளான்.

கப்டன் வொன்டிறிபேக், ஆங்கிலேயப் படையில் சேர்ந்து கொண்ட ஒல்லாந்தனாவான். இவனுக்கும் பண்டாரவன்னியனுக்கும் இடையில் மோதல்கள் நிகழ்ந்துள்ளன.


1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் கண்டியரசனுக்கும் இடையில் யுத்தம் மூண்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பண்டாரவன்னியன் மூன்று படைப்பிரிவுகளை இரவோடிரவாக அனுப்பி, ஆனையிறவுக் கோட்டை, இயக்கச்சி பைல் (Pyl) கோட்டை, வெற்றிலைக்கேணி பெஸ்சூற்றர் (BeochUter) கோட்டை ஆகியவற்றைத் தாக்கினான். முள்ளிய வளையிலிருந்து சுண்டிக்குளமூடாகச் சென்ற பண்டார வன்னியனின் படை பெஸ்சூற்றர் கோட்டையைக் கைப்பற்றியது. குமாரசிங்க முதலியார் தலைமையில் கண்டாவளையூடாக இயக்கச்சிக்குச் சென்ற வன்னிவீரர்கள் பைல் கோட்டையைக் கைப்பற்றினர்.

கோட்டைகளில் இருந்த படையினரில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டனர். ஒரு பகுதியினர் தப்பி யாழ்ப்பாணத்திற்கு ஓடினர். தாம் கைப்பற்றிய கோட்டைகளைத் தகர்த்துவிடுமாறு பண்டார வன்னியன் கட்டளையிட்டான்.பெஸ்சூற்றர், பைல் கோட்டைகளில் சில பகுதிகள் தகர்க்கப்பட்டன. ஆனையிறவுக் கோட்டையின் நான்கு கொத்தளங்களும் தகர்க்கப்பட்ட நிலையில், ஆங்கிலேயரின் படை பெருந்திரளாக நெருங்கி வந்தமையால், பண்டாரவன்னியன் தன்படை வீரர்களுடன் கற்சிலைமடுவுக்குப் பின்வாங்க நேர்ந்தது. அதே ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் முல்லைத்தீவில், கப்டன் வென்டிறிபேக் அமைத்து வந்த கோட்டையை பண்டார வன்னியன் தாக்கியுள்ளான். அவனுக்கு உதவியாக நுவரகலாவியா திசாவையினதும் கண்டி மன்னனதும் படைகள் சென்றுள்ளன. முல்லைதீவுத் தாக்குதலில் தோல்வியடைந்த டிறிபேக் தனது வீரர்களுடன் யாழ்ப்பாணத்திற்கு வள்ளங்களில் தப்பியோட நேர்ந்தது. எனினும் திருகோணமலையிலிருந்து ஆங்கிலேயப்படை எட்வேட் மெட்சின் என்பவனின் தலைமையில் முல்லைதீவைக் கைப்பற்றிக் கொண்டது.

பண்டாரவன்னியனும் அவனுடைய படைவீரர்களும் கோட்டையிலிருந்து மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்றனர். பண்டாரவன்னியனுக்கு உதவி புரிந்தமைக்காக இராசத்துரோக குற்றம் சாட்டப்பட்டு குமாரசேகர முதலியாரும் அவருடைய நண்பர்கள் சிலரும் தூக்கிலிடப்பட்டனர்.

அதன் பிறகும் பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்குப் பெருந்தலையிடியாக விளங்கியுள்ளான். ஆனையிறவுக்கோட்டை, இயக்கச்சிக் கோட்டை என்பன அவனது தாக்குதலுக்குள்ளாகின. அதனால் 1803 ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படையணி ஜோயுவெலின் தலைமை யிலும், மன்னாரிலிருந்து ஒரு படையணி கப்டன் வொன்றிபேக் தலைமையிலும் வன்னியை நோக்கி நகர்ந்தன. கற்சிலை மடுவில் பண்டாரவன்னியனையும் அவனது வீரர்களையும் கப்டன் வொன்றிபேக்கின் படை சந்தித்தது. போர் மூண்டது. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டமையால், கரந்துறைந்தான்.

கப்டன் வொன்டிறிபேக்கிற்குப் பண்டாரவன்னியனைக் கைது செய்யவோ, சாகடிக்கவோ முடியாது போனது. அவன் தனக்கு முன்னர் ஏற்பட்ட அவமானத்தைப்போக்க விரும்பி, கற்சிலை மடுவில் நடுகல் ஒன்றை நாட்டுவித்தான். அதில் 1803 ஒக்டோபர் 31 இல் இங்கு கப்டன் வொன் டிறிபேக் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான் எனப் பொறிக்கப்பட்டுள்ளது.




Pandaaravanniyan

பண்டாரவன்னியன் நினைவாக அமைத்த நடுகல்

1811 ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதத்தில் பண்டாரவன்னியன் கண்டி மன்னனின் உதவியுடன் உடையாவூரில் ஆங்கிலேயரைத் தாக்கினான். இவ்வாறான தாக்குதல் நிகழவுள்ளதென்பதை முன்கூட்டியே ஒற்றறிந்த ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்திலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் படையினரைக் குவித்திருந்தனர். அதனால் பண்டார வன்னியனின் படை அழிவையும், பண்டாரவன்னியன் கடுங்காயங்களுக்குமுள்ளாக நேர்ந்தது. இவனை இவனது வீரர்கள் பனங்காமத்திற்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்துக் காப்பாற்ற முயன்றனர். முடியவில்லை. அங்கு பண்டார வன்னியன் என்ற சுதந்திர வன்னி வீரன் மரணமடைந்தான். (தொடரும்)

**கலாநிதி க.குணராசா**
செங்கை ஆழியான்

**ஈழத்தவர் வரலாறு என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான் ) எழுதிய தொடரில் நாளை முதல் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் என்னும் தொடர் பிரசுரமாகும்.**

## அதிக விலையில் குளிர்பானம் விற்ற வர்த்தகர்கள் இருவருக்குத் தண்டம்

பொறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிகமான விலையில் குளிர்பானம் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 6 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

இவ் வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட பாவனையாளர் திணைக்களத்தால் இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை கடந்த புதன் கிழமை நடைபெற்ற போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வர்த்தகருக்கு ஐயா யிரம் ரூபாவும் மற்றைய வர்த்தகருக்கு ஆயி ரத்து 500 ரூபாவும் தண்டமாக விதிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இதுபோன்ற பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (ச-6)

## மாந்தை நாகதாழ்வு கிராம மக்கள் 20 வருடங்களின் பின் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

மாந்தை நாகதாழ்வு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த 20 வருடங்களின் பின் மீண்டும் தமது சொந்த இடங்களில் நேற்று முன் தினம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மன்னார் நகரப்பகுதியில் உள்ள அவர்களுடைய உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வந்த 44 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேரே இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஸ்ரான்லி டிமேல் தெரிவித்தார்.

இவர்களுக்கான மதிய உணவு வழங்கப்பட்டதோடு வாழ்வுதய அமைப்பினால் தற்காலிக கொட்டில்களும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேறிய மக்களுக்கு இராணுவத்தினரும் பல உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை கடந்த 20 ஆம் திகதி 52 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் மாந்தை எள்ளுப்பிட்டி கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)






மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை மக்கள் வங்கி, இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் யுத்தத்தாலும் மற்றும் அனர்த்தங்களாலும் தமது அவயவங்களை இழந்த 20 பயனாளிகளுக்கு ரூபா 4 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா பெறுமதியான செயற்கைக்கால்களை வழங்கியது. யாழ். ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் க.சுசீந்திரன் பயனாளி ஒருவருக்கு செயற்கை அவயவம் ஒன்றை வழங்குவதையும் இந்து மாமன்ற உபதலைவர் திருமதி சியாமளா வாசுதேவன் மற்றும் செல்வி ரேணுகா அருணாசலம், யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், உதவிப் பிராந்திய முகாமையாளர் நா.நாகேஸ்வரன் ஆகியோர் அருகில் நிற்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்..!

# சிறுகுறிஞ்சாவின் மருத்துவப் பயன்பாடுகளும் Biotec நிறுவனத்தின் செயற்பாடுகளும்

(நேற்றைய தொடர்ச்சி)

1993 இல் Biotec international நிறுவனத்தினால் சிறு குறிஞ்சாத் தோட்டமொன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டு இன்று வரை சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. Bio tec நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கு இலங்கையின் சிறந்த உணவுப் பண்டங்கள் ,பானங்களிற்கான (Food & beverage) ஜனாதிபதி விருது 2006 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ளது.


தற்போது சிறுகுறிஞ்சா தயாரிப்புகளுக்கு இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் பெரும் வரவேற்பு கிட்டியுள்ளதால் கிளிநொச்சியில் நூறு ஏக்கர் பரப்பளவில் குறிஞ்சாத் தோட்டமும் குறிஞ்சாக்காடும் Biotec இன் கிளை நிறுவனமான Biotec agroproducts நிறுவனத்தினால் மூன்று கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றது.இதற்குத் தேவையான நூறு ஏக்கர் நிலம் இலங்கை அரசாங்கத்திடமிருந்து குத்தகையடிப்படையில் பெறப்பட்டுள்ளது. இம் முயற்சிக்கு மக்களின் பெரும் ஆதரவை (பங்குகளில் முதலிடுதல் மூலமாக) நிறுவனத்தினர் எதிர்பார்த்திருக்கின்றனர்.Biotec இன் தற்போதைய வளர்ச்சிக்கும் மக்களின் ஆதரவே முற்று முழுதான காரணமென இந்நிறுவனத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

Biotec நிறுவனம் சிறுகுறிஞ்சா தயாரிப்புக்கள் மட்டுமன்றி இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட திராட்சை வைன்,2D கோலா மற்றும் பீ.பீ.ஜி கூந்தல் எண்ணெய் (B.B.G Hair oil) ஆகியனவற்றையும் விற்பனை செய்து வருகின்றது.

**திராட்சை வைன்**

வைனானது நொதிக்க விடப்பட்ட திராட்சைச் சாறிலிருந்து பெறப்பட்ட அற்ககோல் பானமாகும்.வெவ்வேறு வகையான மதுவங்களை(Yeast) பயன்படுத்தி, அழுத்தப்பட்ட திராட்சைப் பழங்கள் நொதிக்க விடப்பட்டு திராட்சை வைன் உற்பத்தி செய்யப்படுகின்றது.

மிதமிஞ்சிய அற்ககோல் பாவனை ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனினும் குறிப்பிட்டளவு அற்ககோல், அதாவது வைன் அருந்துவதுபுள்ளிவிபரவியல் ரீதியாக இருதய நோய் காரணமாக



ஏற்படுகின்ற இறப்பு வீதத்தைக் குறைத்துள்ளதாக ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. சிவப்பு வைன்(Red wine) ஆனது வெள்ளை வைன்(White Wine)ஐ விட கூடியளவு பல்பீனோல் (Poly pgenol) முரண் ஒட்சியேற்றி (anti oxident)ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது.. இவை குறிப்பாக இருதய நோயைத் தடுக்கும். முரண் ஒட்சியேற்றி ஆனது இரத்தக் குழாயில் கொலஸ்ரோல் படிவதைத் தடுக்கின்றது.



படம் -III சிவப்பு வைன், வெள்ளை வைன்.

புற்றுநோய் தொடர்பான ஆய்வு அறிக்கையில், அளவான வைன் உள்ளெடுத்தலானது நுரையீரல் புற்றுநோய் Lung Cancer தாக்கவீதத்தைக் குறைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Biotec நிறுவனத்தில் இருவகையான திராட்சை வைன் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. உலர் வைன் (Dry Wine) (அற்ககோல் 10%v/v), இனிப்பு வைன் (Sweet Wine )(அற்ககோல் 10% v/v) உலர் வைனில் சீனி இல்லை. இது நீரிழிவு நோயாளர்களிற்கும் உகந்தது. தினமும் குறிப்பிட்ட அளவு வைன் அருந்துவதால், இருதய நோயின் பாதிப்பு வீதம் குறைவடைவதாக ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

**2D cola**

இது coco colaவை ஒத்த இனிப்பும் சுவையும் உடையது. ஆனால் இதற்கு சீனி சேர்க்கப்படுவதில்லை. நீரிழிவு நோய், உயர்குருதியமுக்கம் உடையவர்களுக்கும் நிறைகுறைக்க விரும்புபவர்களிற்கும் மிக உகந்த மென்பானம்.

**பீ.பீ.ஜி கூந்தல் எண்ணெய் (B.B.G Hair oil)**

பீ.பீ.ஜி கூந்தல் எண்ணெய் முற்று முழுதாக மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. மூலிகைச் சாறு நல்லெண்ணெய் (gingerly oil) இல் குளிர் நிபந்தனையில் பிரித்தெடுக்கப்படுகின்றது. இது தலைமுடியின் வளர்ச்சியையும், அடர்த்தியையும், கருமையையும், பளபளப்பையும் அதிகரிப்பதுடன், கலங்களின் மீள் உயிர்ப்புத் தன்மையையும் அதிகரிக்கும். இது தலைமுடி உதிர்தல் அறுதல், நரைத்தல், வழுக்கை உருவாதல் ஆகியவற்றை குறைப்பதுடன், தலைமுடியின் சொரசொரப்பான இயல்பையும் குறைக்கின்றது. அத்துடன் நகம், தோல் என்பன அழகான தோற்றத்தை பெறவும் உதவுகின்றது.

சிறுகுறிஞ்சாவானது நீரிழிவு நோயாளர்களிற்கு மட்டுமன்றி அனைவரிற்கும் பலவழிகளில் பயனுள்ள சிறந்த மருத்துவ மூலிகையாகும்.

**செல்வி யசோதரா பில்வமங்களம்**
உதவி விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை,
யா/பல்கலைக்கழகம்.

இம் மருத்துவ மூலப்பொருளின் உயர் பெறுமதி மக்களைச் சென்றடையும் வகையில் Biotec நிறுவனமானது எதனைச் சிறந்த முடிவுப் பொருட்களாக மாற்றி வழங்குவதன் மூலம் அனைவரிற்கும் சேவையாற்றி வருகின்றது. ✠

# வடக்கில் மத்தியஸ்த சபைகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கில் மத்தியஸ்த சபைகளைத் ஸ்தாபிப்பதற்காக பெயர் குறித்த நியமனங்களைக் கோரும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய அதன் முதல் கட்டத்தின் கீழ் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய நான்கு மத்தியஸ் தர்கள் குழாத்துக்களுக்காக பெயர் குறித்த நியமனங்களைக் கோருவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

மத்தியஸ்தர்களாக நியமனம் பெற விரும்புவோருக்கு தேவையான விண்ணப் பங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களின் மூலம் பெற்றுக் கொள்ளும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லாப் பிரதேச செயலகங்களையும் மேவும் வகையில் 14 மத்தியஸ்த சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு மத்தியஸ்த சபை மாத்திரமே தற்போது தொழில்படுகின்றதென அமைச்சு கூறுகிறது.

எவ்வாறாயினும் மன்னார் மாவட்டத்தில் ஒரு மத்தியஸ்த சபையாவது இதுவரை ஸ்தாபிக்கப்படவில்லை.

கடந்த பத்தாண்டுகளாக அப் பிரதேசங்களில் நிலவிய யுத்த நிலைமை இதற்கு காரணம் ஆகும்.

எனவே அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதை துரிதப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்ன அறிவுரை வழங்கியுள்ளார்.

இந்த நான்கு மத்தியஸ்த சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் மாகாணத்தின் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மத்தியஸ்த சபைகள் ஸ்தாபிக்கப்படுமென அமைச்சு தெரிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

# துப்பாக்கி முனையில் ரூ.7 கோடி கொள்ளை

(கொழும்பு)

பேலியகொடை,தெகலபொத பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் ஏழு கோடி ரூபா பணம் நேற்றுஅதிகாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தனியார் வங்கியொன்றின் ரேலர் இயந்திரத்துக்கு வான் ஒன்றில் வந்த அதிகாரிகள் சிலர் பணம் இட முற்படுகையிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வானை மறித்துள்ள ஆயுததாரிகள் ஐவர் அதிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரின் துப்பாக்கிகளையும் பறித்துள்ளதுடன் வானிலிருந்த ஏழு கோடி ரூபா பணத்தினையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.


நேற்று அதிகாலை ஒரு மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினரர். (ஶ்ரீ-2)

## கலந்துரையாடல்

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)







வடமாகாண கல்வித்திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த தரம் 13 இற்கு இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆரம்ப உரையாற்றுவதையும் அருகில் வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக்கல்விப்பணிப்பாளர் க.சிவனருள்ராஜா செயலமர்வை நடத்துவதையும் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# காஷ்மீர் இந்தியாவின் ஒருபகுதி என்று சொல்வதை முதலில் நிறுத்த வேண்டும்

## இந்தியாவுக்கு பாகிஸ்தான் கண்டிப்பு

காஷ்மீரை இந்தியாவின் ஒரு பகுதி என்று சொல்வதை இந்தியா நிறுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் பாசித் நேற்று முன்தினம் கூறுகையில்,

காஷ்மீரை இந்தியாவின் ஒரு பகுதி என்று சொல்வதை நிறுத்தாவிட்டால் இந்தியாவுடன் எந்தவித பேச்சுவார்த்தையிலும் பாகிஸ்தான் ஈடுபடாது.

காஷ்மீர் பிரச்சனையில் இந்தியா தனது நிலையை மாற்றிக் கொள்ளவேண்டும். இந்தியா தனது அணுகு முறையை மாற்றிக் கொள்ளாவிட்டால் ஜம்மு- காஷ்மீர் பிரச்சனையில் எந்தவித தீர்வும் ஏற்படாது.

எனவே காஷ்மீர் பிரச்சனையில் புதிய கொள்கையை இந்தியா உருவாக்கவேண்டும். காஷ்மீரை இந்தியாவின் ஒரு பகுதி என்று சொல்வதை முதலில் நிறுத்தவேண்டும். மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டுத்தான் இப்பிரச்சனையை அணுகுவோம் என்ற வாதத்தையும் இந்தியா நிறுத்த வேண்டும். காஷ்மீரில் நடந்துவரும் கலவரம் தொடர்பாக அனைத்துக் கட்சிக் குழுவினர் சென்றதை ஹுரியத் மாநாட்டுக் கட்சியினர் ஏற்கவில்லை.

ஜம்மு - காஷ்மீர் பிரச்சனை சர்வதேச பிரச்சனையாகும். இங்கு நடந்து வரும் கலவரத்தை ஒடுக்க இந்திய பாதுகாப்புப் படையினர் எடுத்து வரும் முயற்சிகள் பலனற்றவை. இந்தியப் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் மனித உரிமையை மீறுவதாக உள்ளது.

காஷ்மீரில் நடந்து வரும் கலவரம் நிறுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலர் பான் கி- மூன் கேட்டுக் கொண்டுள்ளார். அதைப் போலவே கலவரத்தை நிறுத்திவிட்டு காஷ்மீர் மக்களின் உரிமையை பாதுகாக்கவேண்டுமென்று இஸ்லாமிய மாநாட்டு அமைப்பும், அம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பும் கோரிக்கை விடுத்துள்ளன.

இப்பிரச்சனையில் அமைதியான முறையில் தீர்வு காணவேண்டும் என்று பாகிஸ்தான் உறுதி பூண்டுள்ளது. காஷ்மீரில் வாழும் மக்களுக்கு அரசியல், அதிகார ஆதரவை பாகிஸ்தான் என்றும் வழங்கும். காஷ்மீர் விடயத்தில் இந்தியாவுக்கு எதிராக எந்த பிரசாரத்தையும் பாகிஸ்தான் செய்யவில்லை.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா முகமது குரேஷி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோர் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசுவது குறித்து இதுவரை முடிவு செய்யப்படவில்லை. நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் கிருஷ்ணா, குரேஷி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.


அவர்கள் இருவரும் சந்தித்து பேசுவது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாகவும் முடிவு காணத்தக்கதாகவும் ஒருங்கிணைந்ததாகவும் ஸ்திரமானதாகவும் இருக்க வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது.

அதே நேரத்தில் காஷ் மீரில் நடந்து வரும் அத்துமீறல்களை இந்தியா நிறுத்த வேண்டும். இந்தியா வருமாறு பாகிஸ்தான் அமைச்சர் குரேஷிக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அழைப்பு விடுத்துள்ளார்.

ஸ்திரமான ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தைக்கு இந்தியா ஒப்புக்கொள்வதைப் பொறுத்தே குரேஷி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார் என்று அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## அறிவுரை கூறுவதற்கு முன் காஷ்மீர் ஆக்கிரமிப்பு பகுதிகளிலிருந்து பாகிஸ்தான் வெளியேற வேண்டும்

### இந்தியா வலியுறுத்தல்



(நியூயோர்க்)

இந்தியாவுக்கு அறிவுரை கூறுவதற்கு முன்னால் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் ஆக்கிரமித் துள்ள பகுதிகளிலிருந்து உடனடி யாக பாகிஸ்தான் வெளியேற வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா கூறினார்.

ஐக்கிய நாடுகள் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் நகருக்கு 10 நாட்கள் பயணமாக மத்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா சென்றுள்ளார்.

அங்கு தனியார் தொலைக் காட்சிக்கு கிருஷ்ணா கடந்த புதன்கிழமை அளித்த பேட்டியில் காஷ்மீர் பிரச்சினை இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தின் சில பகுதிகளில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ளது. பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் இங்கு சட்டவிரோதமாக குடியேறி வருவது இந்திய அரசுக்குத் தெரிய வந்துள்ளது.

இந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்த வேண்டும். அதன் பின்னரே காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கு பாகிஸ்தான் அறிவுரை கூறலாம்.

காஷ்மீரில் என்ன செய்யவேண்டும் என்று எங்களுக்குத் தெரியும் காஷ்மீருக்கு சென்றிருந்த அனைத்துக்கட்சிக்குழு இப்போதுதான் டில்லி திரும்பியுள்ளது. காஷ்மீரில் பல்வேறு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்களுடன் அனைத்துக் கட்சி குழுவினர் விவாதித்து விட்டுத் திரும்பியுள்ளனர். அனைத்துக் கட்சிக் குழுவினர் கூறும் கருத் துக்களைக் கேட்டறிந்த பின்னர் இந்திய அரசு முடிவுகளை எடுக்கும். காஷ்மீர் மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதை அறிந்து அதற்கேற்ற வகையில் தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்று அவர் கூறினார். (ஸ்ரீ-2)




# கச்சதீவை நோக்கி 10 ஆயிரம் இந்திய மீனவர்கள் படையெடுப்பு!

இந்திய மீனவர்கள் 10 ஆயிரம் பேர் கச்சதீவை நோக்கிச் செல்லும் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 11 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்கி வருவதற்குக் கண்டனம் தெரிவித்தே இவர்கள் இந்தப் போராட்டத்தை மேற் கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


கச்சதீவு அருகே சென்று மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுடுவது தொடர்கதையாகிவிட்டது. இது குறித்து மத்திய அரசும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

இந்திய அரசின் மௌனமும் அலட்சியமும் இலங்கை கடற்படையினருக்கே சாதகமாக உள்ளன. சுடப்படுவதும் உயிரிழப்பதும் தாக்கப்படுவதும் சேதங்களை சந்திப்பதும் மீனவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் அனைத்து மீனவர்கள் சங்க கூட்டம் மகத்துவம் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் மீனவர் சங்கத் தலைவர்கள் போஸ், அந்தோணி, சேசுராஜா, எமரிட், ஜான், தட்சிணாமூர்த்தி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் இலங்கைக் கடற்படை தாக்குதலை தடுத்து நிறுத்த மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் -கச்சதீவு பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையைத் தமக்கு நிலைநாட்டித் தர வேண்டும் - எல்லை தாண்டிச் சென்ற 110 படகுகளுக்கு நோட்டிஸ் வழங்கப்பட்டுள்ளதை இரத்து செய்ய வேண்டும்- இலங்கையில் உள்ள படகுகளை மீட்டுத் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறி எதிர்வரும் 11 ஆம் திகதி ஆயிரம் படகுகளில் 10 ஆயிரம் மீனவர்கள் ஒன்று திரண்டு கச்சதீவு சென்று போராட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)



தமிழக முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். இந்நிகழ்வின் போது அவரது மனைவி லீலாதேவி, மகன் செந்தூரன் ஆகியோர் உடனிருந்தனர்.


## 30 ஆண்டுகளுக்கு முன் மூழ்கிய கப்பல் மங்களூர் கடல் பகுதியில் கண்டுபிடிப்பு

மங்களூர் அருகே கடலில் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு நடந்த விபத்தில் மூழ்கிய கப்பலின் பாகங்களை மீனவர்கள் கொடுத்த தகவலின் பேரில் நகரசபை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். மங்களூர் அருகே உள்ள கடலில் கப்பலின் உதிரிப் பாகங்கள் இருப்பதாக மீனவர்கள் நகரசபை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து நகரசபை அதிகாரிகள், மீனவர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஜே.சி.பி. மற்றும் இயந்திரங்களை உபயோகப்படுத்தி ஆழப்படுத்தி கப்பலின் உதிரிப்பாகங்களை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் போது அங்கு நங்கூர கயிறு கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ந்து அதே இடத்தை மையப்படுத்தி ஆழப்படுத்திய போது கப்பலின் அடிப்பகுதியில் இருக்கும் விசிறி கண்டு பிடிக்கப்பட்து. இந்த விசிறி கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் ரவீந்திரநாத் தாகூர் கடற்கரையில் நடந்த விபத்தில் மூழ்கிய கப்பலினுடையது என குறிப்பிடப்படுகிறது. மேலும் நிலத்தை தோண்டிய போது கப்பலின் கிரெனில் உபயோகப்படுத்தும் இரும்புப் பாகம் கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ந்து கப்பலின் பிற பாகங்களை கண்டுபிடிக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (ஸ்ரீ-2)

# சீனாவில் கடுமையான புயல்; நூற்றுக்கணக்கானோர் பலி



(குவாங்டாங்)

சீனாவில் வீசிய கடும் புயலால் ஏற்பட்டுள்ள வெள்ளத்திற்கு நூற்றுக்க ணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

தெற்கு சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் பினாபி புயல் தாக்கி யதைத் தொடர்ந்து அங்கு கடும் வெள் ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஏராளமானோரைக் காணவில்லை என்பதால் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என்று அஞ் சப்படுகிறது.

தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 78 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனிடையே இந்த ஆண்டில் சீனாவை மிக மோசமாகத் தாக்கியதாக பினூபி புயல் கருதப்படுகிறது. இதனால் சீன அரசுக்கு இந்திய மதிப்பில் முன்னூறு கோடி ரூபாய் வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. கடும் புயலைத் தொடர்ந்து பல இடங்களில் அங்கு தொடர்ச்சியான மழையும் பெய்து வருகிறது. (ஸ்ரீ-2)




# உலகின் சிறந்த நிர்வாகியாக இந்தியப் பிரதமர் மன்மோகன் தெரிவு



(நியூயோர்க்)

உலகின் சிறந்த நிர்வாகிக்கான இவ்வாண்டின் விருது இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை அமெரிக்க அமைப்பு வழங்கியுள்ளது.

புரிந்து கொள்ளுதல் , சகிப்புத்தன்மை மற்றும் அமைதி ஆகியவற்றை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள அப்பீல் ஆப் கான்சயின்ஸ் பவுண்டேஷன் என்ற இவ்வமைப்பு அதன் சார்பில் சுதந்திரம், ஜனநாயகம், அமைதிக் கான மனித உரிமை பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் அடிப்படை மதிப்பை காக்க தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

அதன் சார்பில் ஆண்டுதோறும் உலகின் சிறந்த நிர்வாகி விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அறிவிக்கப்பட்டது. நியூயோர்க்கில் கடந்த 21 ஆம் திகதி விருது வழங்கும் விழா கோலாகலமாக நடந்தது. அதில் பிரதமரின் சார்பில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் மீரா ஷங்கர் அந்த விருதை பெற்றுக்கொண்டார். விருதை ஏற்று பிரதமர் ஆற்றிய உரை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டது.

அதில் மன்மோகன் சிங் கூறுகையில், ஆன்மீக கோட்பாடுகள் உட்பட பல வடிவங்களில் அடிப்படை நம்பிக்கையை இந்தியா பழங்காலத்தில் இருந்து வழிகாட்டியாக பின்பற்றி வந்துள்ளது. உயர்ந்த மதிப்பு, எண்ணம் மற்றும் இயல்பான மனிதத் தன்மை ஆகியவற்றின் மூலம் இந்திய மக்கள் அனைவரும் இணைந்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

இது குறித்து முன்னுரை ஆற்றிய அமெரிக்க முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹென்றி கிசிங்கர், பிரதமர் மன்மோகன் சிங் தொலைநோக்கு பார்வை, ஒற்றுமையுணர்வு கொண்ட சிறந்த நிர்வாகி என்றும் இந்தியா இன்று கண்டுள்ள பொருளாதார மாற்றம் அவரது தலைமையால் சாத்தியமானது என்றும் புகழாரம் சூட்டினார். (ஸ்ரீ-2)

# அணு ஆயுதத்தை ஒழிக்க 10 நாடுகள் சேர்ந்து குழு

(நியூயோர்க்)

அணு ஆயுதத்தை ஒழிக்க ஜப்பான், ஜெர்மனி மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 1945 ஆம் ஆண்டு அமெரிக்கா வீசிய அணுகுண்டால் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் பாதிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இனி இந்த ஆயுதத்தை பயன்படுத்தக் கூடாது என்ப தற்காக, அணு ஆயுத பரவல் தடை ஒப்பந் தம் போன்றவை உருவாக்கப்பட்டன. இருப்பினும் இந்த ஒப்பந்தத்தில் பல நாடுகள் கையெழுத்திடாமல் உள்ளன. ஈரான், வட கொரியா போன்ற நாடுகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து கொண்டி ருந்தன.

இதனையடுத்து மனித குலத்துக்கு எதிரான அணு ஆயுதத்தை ஒழிப்பதற்காக ஜப்பான், ஜெர்மனி, அவுஸ்திரேலியா, கனடா, சிலி , மெக்சிக்கோ, ஐக்கிய அரபு ,எமிரேட், துருக்கி, போலந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளன.

இந்த அமைப்பின் மூலம் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்யாமல் தடுக்கவும் தற்போதுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை குறைக்கவும் வற்புறுத்த திட்டமிடப்பட்டுள்ளது.


நியூயோர்க்கில் நடந்த கூட்டத்தில் இந்த அமைப்பை உருவாக்கிய பின் ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் சீஜி மயிஹறா குறிப்பிடுகையில்,

அணு ஆயுதபரவல் தடை ஒப்பந்தம் பல வீனமடைந்து விட்டது. எனவே, இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதற்கான இலக்கை அடைய இந்த அமைப்பின் மூலம் பாடுபடுவோம் என்றார்.

இது குறித்து அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் கெவின்ரூட் குறிப்பிடுகையில்,

உலகம் முழுவதும் 23 ஆயிரம் அணு ஆயுதங்கள் உள்ளன. இந்த எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட வேண்டும். இனிமேல் எந்த நாடும் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்யக்கூடாது, என்பதை இந்த அமைப்பின் மூலம் வற்புறுத்துவோம் என்றார்.

இந்த அமைப்பின் அடுத்த கூட்டம் ஜெர்மனியில் அடுத்த ஆண்டு நடக்கும் என ஜெர்மனிய வெளியுறவுத்துறை அமைச்சர் குய்டோ தெரிவித்தார். (ஸ்ரீ-2)



சர்வதேச ஆர்டிக் மாநாடு ரஷ்யாவின் மொஸ்கோவில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஐஸ்லாந்து ஜனாதிபதி உல்பர் கிரீம்ஸனுக்கு ரஷ்ய புவியியல் சங்கத்தில் உறுப்பினர் சான்றிதழை ரஷ்ய பிரதமர் விளாடி மிர்புடின் வழங்கினார்.

# ஜப்பானின் அழைப்பை ஏற்க சீனா மறுப்பு

(பீஜிங்)

சீனக் கடலில் உள்ள டியாவோயூ தீவு யாருக்குச் சொந்தம் என்ற சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளது. இந்த நிலையில் அந்தத் தீவில் ஜப்பான் ரோந்துக் கப்பல்கள் சென்ற போது அவற்றின் மீது சீன மீன்பிடிக்கப்பல் ஒன்று மோதியது.

இதைத் தொடர்ந்து அந்தக் கப்பலின் கப்டனை ஜப்பான் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்தியது. அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் கப்பல் கப்டனை உடனடியாக விடுவிக்கும் படி சீனா கேட்டுக் கொண்டுள்ளது. இது தவறினால் ஜப்பான் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதன் விளைவுகளுக்கு ஜப்பான் தான் பொறுப்புக் கூற வேண்டுமென சீனா மிரட்டியுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முன்வர வேண்டுமென சீனாவை ஜப்பான் அழைத்தது. இந்த அழைப்பை சீனா ஏற்க மறுத்து விட்டது. முதலில் ஜப்பான் எந்தவித நிபந்தனையுமின்றி கப்பல் கப்டனை விடுவிக்க வேண்டும் என்று சீன வெளிநாட்டு இலாகா அதிகாரி தெரிவித்து இருக்கிறார். மேலும் அரியவகை மண்ணை சீனா ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து வந்தது. இந்த ஏற்றுமதிக்கு சீனா இப்போது தடை விதித்துள்ளது. (ஸ்ரீ-2)



வெனிசுலா சட்டமன்ற தேர்தல் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெறுகிறது. கார்கஸ் மாகாணத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் அந்நாட்டின் ஜனாதிபதி ஹூகோ சவேஸ்.

# அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலில் பில்கேட்ஸ் தொடர்ந்து முதலிடம்

(பாஸ்டன்)

அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலில் தொடர்ந்து 17 ஆவது ஆண்டாக மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ் முதலிடத்தில் உள்ளார். 400 பேர் கொண்ட இந்தப் பட்டியலை ஃபோர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் 4 அமெரிக்க வாழ் இந்தியர்களும் இடம்பெற்றுள்ளனர்.

5 ஆயிரத்து400 கோடி டொலர் சொத்து மதிப்புடன் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் பில்கேட்ஸ் உள்ளார். இவருக்கு அடுத்தபடியாக தொழிலதிபர் வாரன் பஃபட் 4ஆயிரத்து500 கோடி டொலர் சொத்துடன் இரண்டாவது இடத்திலும் ஆரக்கிள் இணை நிறுவுனர் லாரி எலிசன் 2 ஆயிரத்து700 கோடி டொலர் சொத்துடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.


இணையத்தளத்தில் மிகவும் பிரபலமான பேஸ்புக் வலைதளத்தின் நிறுவுனர் மார்க் ஜுகர் பெர்க் 690 கோடி டொலர் சொத்துடன் பட்டியலில் 35 ஆவது இடத்தில் உள்ளார்.

அப்பிள் நிறுவனத் தலைவர் ஸ்டீவ் ஜாப் ஊடகத்துறையைச் சேர்ந்த ஒபராவின் பிரேயும் பட்டியலில் பின்தங்கியுள்ளனர். ஸ்டீவ் ஜாப் 610 கோடி டொலர் சொத்து மதிப்புடன் பட்டியலில் 42 ஆவது இடத்திலும், வின் பிரே 270 கோடி டாலர் சொத்துடன் 130 ஆவது இடத்திலும் உள்ளனர். (ஸ்ரீ-2)



பண்டத்தரிப்பு பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் பிரான்பற்று இலுப்பையடி வைரவர் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சி, விளையாட்டு நிகழ்வுகளையும் முன்பள்ளி ஆசிரியர் திருமதி.கு.இந்திராதேவி வெற்றிபெற்ற மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இவரது உறவினர்களை தொடர்பு கொள்ள கோரிக்கை



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உளநலப்பிரிவில் 12.08.2010 அன்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் உளநல சிகிச்சைக்காக 13 வயது முதல் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கொழும்பு பம்பலப்பிட்டியிலிருந்து கொண்டு வந்ததாக கருதப்படும் இவர் தனது பெயரை மட்டும் லக்ஸன் எனக் கூறிக் கொள்ளும் இவ்வேளையில் தமிழ்ச்சொற்களையே பயன்படுத்தி வருவதனால் தமிழ் சிறுவனாக கருதப்படுவதுடன் இவர் தொடர்பாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

எனவே இவருடன் தொடர்புடையவர்கள் 0212263261, 0212263262 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வைத்திய அத்தியட்சகருடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ. பத்மநாதன் கேட்டுக்கொள்கிறார்.

(ஸ்ரீ)

# சிரித்து வாழ்வதே ஆயுளின் இரகசியம்

வோஷிங்டனில் அண்மையில் தனது 114 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய முதியவர் ஒருவர் தனது நீண்ட ஆயுளுக்கான இரகசியங்களை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் கிரேட பால்ஸ் நகரில் வசித்து வரும் வால்டர் புரூனிங் மின்னசோட்டா மாநிலம் மெல்ரோஸ் நகரில் கடந்த 1896 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி பிறந்தார். 50 ஆவது வயது வரை கிரேட் நார்த்தான புகையிர நிலையத்தில் எழுதுவினைஞராக பணிபுரிந்தார்.

இவர் இப்போது கிரேட் பால்ஸ் நகரில் வசித்து வருகிறார்.

வால்டர் கடந்த செவ்வாயன்று தனது 114 ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். இதில் மாண்டனா மாநில கவர்னர் பிரியன் ஸ்க்வெய்ட்சர் மற்றும் கின்னஸ் உலக சாதனை புத்தக அதிகாரிகள் உள்ளிட்ட பல முக்கியமான 100 பேருக்கு மட்டும் அழைப்பு விடுத்திருந்தார்.



வால்டா இவ்விழாவில் பல சுவாரஸ்மான தகவல்களை தெரிவித்தார். வால்டர் எல்லோரையும் சிரிக்க வைப்பது என வாழ்க்கையில் மிகவும் ஒன்றிவிட்ட விடயங்கள் இதுவே நீண்ட ஆயுளுக்கான இரகசியம் என வால்டர் தெரிவித்தார்.

இவரது மனைவி அக்னீசும் புகையிரத நிலையத்தில் பணி புரிந்துள்ளார். 1957 இல் அவர் இறந்ததன் காரணமாக இந்த தம்பதிக்கு குழந்தைகள் இல்லை. உலகின் வயதான ஆண் என்ற பெருமையை பெற்றுள்ள வால்டர் எனினும் இவரைவிட மூத்த வயதுடைய 3 பெண்கள் இருப்பதால் உலகின் வயதான மனிதர்களில் இவருக்கு 4 ஆவது இடமே கிடைத்துள்ளது. (ஸ்ரீ-2)

# சிறுவர் போசாக்குத் திட்டத்தை மேம்படுத்த

# தேசிய மட்டத்திலான நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சிறுவர் போஷாக்கு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளும் வகையில் தேசிய மட்டத்திலான நடவடிக்கை குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவில் சில அமைச்சுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம், கால்நடைவள அபிவிருத்தி, கல்வி, பொருளாதார அபிவிருத்தி, நிதி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளை கொண்டதாக இந்தக்குழு ஸ்தாபிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய நடவடிக்கைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினரும் வைத்திய கலாநிதியுமான சுதர்சினி பெர்னாண்டோ பிள்ளையை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன தீர்மானித்துள்ளார்.

திட்டத்தின் முதற்கட்டமாக மாதிரி செயற்திட்டங்களை சில மாவட்டங்களில் முன்னெடுப்பதற்கும் பின்னர் அதனை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலை களில் தரம் 10, 11 இற்கு மனைப் பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் தரம் -09 இற்கு தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோருக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் மனைப்பொருளியல் பாட ஆசிரியர்களுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்திலும், தமிழ் பாட ஆசிரியர்களுக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடை பெறவுள்ளது.

இதேவேளை தரம் 6 முதல் 11 வரை சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் 3.30 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

மேலும் இச்செயலமர்விற்கு வருகை தரும்போது ஆசிரியர்கள் அறிவுரைப்பு வழிகாட்டி புத்தகத்தை கொண்டுவருமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4-19)

# வவுனியாவில் தொடர் மழை ; மீள்குடியேறிய மக்கள் அவலம்

(கொழும்பு)

வவுனியா பிரதேசத்தில் தொடர் மழை பெய்வதால் சொந்த இடங்களுக்கு மீள்குடியேறிய மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா வீமன்கல் கிராமப் பகுதியில் 33 வருடங்களின் பின்னர் மீள்குடியேறியுள்ள குடும்பங்களின் கூடாரங்களுக்குள் மழைநீர் புகுந்துள்ளது.

இருப்பதற்கும் படுப்பதற்கும் முடியாத நிலையில் தாம் அவதிப்படுவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய வீமன்கல் மட்டுமல்லாமல் குடாச் சகொடி, பாவற்குளம் மற்றும் ரன்கெட்கம உள்ளிட்ட வேறு பல மீள்குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இப்பாதிப்புக்கள் குறித்து வவுனி யா அரசாங்க அதிபர் சார்ள்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது ஆரம்பித்துள்ள மழையினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

எனினும் மழையினால் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு வழங்குவதற்கான அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு மேலதிக கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதேவேளை தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான கூரைத் தகடுகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தொடர்ச்சியான அல்லது கடும் மழையினால் ஏற்படக் கூடிய அவசர நிலைமைகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஐ.நா.வின் அகதிகளுக்கான தூதரக அதிகாரிகளுடன் ஆலோசிக் கப்பட்டுள்ளதுடன் இதற்கென ஒரு திட்டத்தை வகுக்குமாறு அவர்களிடம் கோரியுள்ளதாகவும் அந்தத் திட்டத்திற்கமைய பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்படும் குடும்பங்கள் பராமரிக்கப்படும் என்றும் கூறினார். (ஸ்ரீ-2)

## ஓராண்டின் நினைவில் உறவின் குமுறல்

தோற்றம் 24 . 04 . 1930



மறைவு 06 . 10 . 2009

## வேலுப்பிள்ளை தங்கம்

அன்பொடு அறனும் பண்பும் சுமந்தனை
புன்னகையோடு பூமியில் வாழ்ந்தனை
அன்பொடு அம்மா என்றனர் அனைவரும்
மன்னுமுலகினில் மாய வாழ் வென்றோ?
உன்னதமான உலகை நாடினை
மனிதயாக்கையை மாற்றி மறந்தனை
என்றும் இறைவனின் பாதக்கமலத்தே
நன்றே சாந்தியடைய வேண்டுவோம்.

பெருந்தெரு, புலோலி தெற்கு,
புலோலி. (சீ-1275)

குடும்பத்தினர்

நமக்கு எறும்புகளைப் போல் உபதேசிப்பவர் யாருமில்லை. ஆனால் அந்த எறும்புகளோ பேசுவதில்லை. - ஃபிராங்லின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தொழில் வழிகாட்டல் பயிற்சிகளும் உதவித் திட்டங்களும் அவசியம்

எதை எடுத்தாலும் நூற்று இருபது ரூபா என்று கொச்சைத் தமிழில் உரக்கக் கூறி விளையாட்டுப் பொருள்களை விற்பனை செய்யும் சிங்கள இளைஞரை நல்லூர்த் திருவிழாவின்போது கண்டோம்.

றம்புட்டான் பழத்தை வாகனத்தில் எடுத்து வந்து அதை விற்பனை செய்யும் தென்பகுதி வியாபாரிகளை யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்திகளில் அவதானித்தோம்.

ஆரியகுளத்தில் சோளம் விற்பனை, யாழ். ஆஸ்பத்திரி வீதியில் செவ்விளநீர், பழ நாற்றுக்கள், தென்னங்கன்றுகள் என நீண்டு செல்லும் விற்பனைகளை தினசரி பார்த்துச் செல்கிறோம். இதற்கு மேலாக தெருவோர வியாபாரத்திலும் தென்பகுதி மக்களின் முயற்சிகளைக் காண முடிகின்றது.

உணவுச்சாலைகளை அமைப்பதில் முஸ்லிம் சமூகத்தின் உற்சாகம் வியப்பைத் தருகின்றது.

நிலைமை இதுவாக இருக்கும் போது எங்கள் தமிழ் இளைஞர்களின் தொழில் முயற்சிகள் பற்றி ஒருகணம் சிந்தித்தால் வெட்ட வெளியில் நின்று கத்திக் கதற வேண்டும் போல் இருக்கும். அந்த அளவிற்கு நிலைமை மிகவும் மோசம்.

தொழில் முயற்சிகள் பற்றிய அறிவின்மையும், தெளிவின்மையும், ஊக்கமின்மையும் எங்கள் இளம் சமூகத்தை வேலையற்றவர்களாக ஆக்கி நிற்கின்றது.

அவர்கள் குறித்து எவரும் கவலை கொள்வதாகவும் இல்லை. க.பொ.த. உயர்தரப் படிப்பு, அதற்குப் பின் கணனிக் கற்கை, இந்தப் பிராக்கில் காலம் கடக்க சுயமாகத் தொழில் முயற்சி செய்யும் தன்னம்பிக்கை இழந்துபோக, மதுபானச் சாலையில் நிம்மதி தேடும் படலம் ஆரம்பமாகின்றது. என்ன செய்வது எங்கள் தலைவிதி அப்படி.

அண்மையில் விவசாயக் கண்காட்சி நடத்தினார்கள். அங்கு தென்பகுதியில் இயங்கும் சிஐசி (CIC) நிறுவனம் ஓகோ என்று வியாபாரம் நடத்தியது.

மூன்று ஆண்டுகளில் காய்க்கும் தென்னங்கன்று நூற்றுநாற்பது ரூபாய். இந்திய முருங்கைக்கன்று எழுபத்தைந்து ரூபாய். ஒட்டுத்தோடை (சிறியது) இருநூறு ரூபாய் என்று நாற்றுக்கள் விற்பனையாகின.

இந்த முயற்சிகளை செய்வதற்கு அதிக முதலோ அல்லது பெரும் இடப்பரப்பே தேவை யில்லை. முயற்சியும் தன்னம்பிக்கையும் சந்தைப்படுத்தும் திறனும் இருந்தால் போதுமானதாகும்.

இஃது உதாரணத்திற்கு ஒன்று. இது மட்டுமா! பனம் பண்டத்திற்கென்றே தனியான வியாபாரத்தை ஆரம்பித்தால் இங்கு வரும் தென்பகுதி மக்களின் பெரும் பகுதியினர் இங்கு தான் பொருட் கொள்வனவு செய்வர்.

இப்படியெல்லாம் எத்தனையோ வேலை வாய்ப்புகள் வேரில் பழுத்த பலாவாக கோரிக்கையற்றுக் கிடக்கிறது. வழிகாட்டல்களும் சிறிதளவான நிதி உதவிகளும் இருந்தால் எங்கள் இளம் சமூகமும் கடும் உழைப்பாளிகளாக மாறுவர்.

# அவசரகாலச் சட்டத்தை தடுக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது

## சந்திரகுமார் எம்.பி.மன்றில் உரை

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதென்பது எமது நாட்டின் பெருமைக்கு இழுக்காகும். நாட்டினுடைய நலனுக்கும் இயல்பு நிலைக்கும் அது பொருத்தமற்றது என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவசரகாலச் சட்டம் தொடர்ந்திருக்கும் எந்த நாடும் ஜனநாயகத்திலும் சுதந்திரத்திலும் குறைபாடுள்ளதாகவே இருக்கும். அது மட்டுமல்ல; அது அச்ச நிலையில் இருந்து விடுபட முடியாததாகவே இருக்கும். அத்துடன் இன்று அதிக முக்கியத்துவமாக இருக்கும் நாட்டின் அபிவிருத்திக்கு இது மிகப்பெரிய இடையூறாகவே தொடர்கிறது என்பதையும் நாம் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனவேதான் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் புத்திஜீவிகளும் எதிர்க்கின்றனர். எனவேதான் பாதுகாப்புக் காரணங்களைச் சொன்னாலும் அவசர காலச் சட்டத்தை நீடிப்பதென்பது நாட்டின் வரலாற்றில் ஒரு கறை படிந்த அத்தியாயமாகவே இருக்கும். ஆகவே நாட்டில் நீடித்திருந்த போரை அரசாங்கம் முடிபுக்கு கொண்டுவந்ததைப்போல இந்த அரசாங்கமே அவசரகாலச் சட்டத்தையும் முடிபுக்கு கொண்டுவர வேண்டிய தார்மீகப் பொறுப்புடன் இருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கான சூழலை உருவாக்கும் பொறுப்பு நாட்டிலுள்ள சகலருக்கும் உண்டு. இதில் ஊடகங்களுக்கு முக்கிய பொறுப்பும் கடமையுமுண்டு.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் இயல்பு நிலைக்கு திரும்பமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய தொழில்களைச் செய்வதற்கு அவர்களால் முடியவில்லை.

அவர்கள் கடந்தகால வன்முறைச் சூழலில் எல்லாவற்றையும் இழந்துவிட்டனர். இப்போது அவர்களுக்கு இழப்பீடு தேவையாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவதும் அவர்கள் தங்களுடைய பாதிப்புக்களுக்கு நட்டஈட்டைப் பெறுவதும் உலக நடைமுறையாகும்.

இதை இந்த மன்றிலே இருக்கின்ற அனைவரும் நன்றாக அறிவர். அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேரில் சென்று வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அங்குள்ள நிலைமைகள் பற்றித் தெரியும்.

மீளக் குடியமர்ந்த மக்கள் எதிர்வரும் மாரிகாலத்தைக் கடப்பதற்காக மேலும் ஆறு மாதங்களுக்குரிய உலர் உணவு நிவாரணத்தை வழங்கவேண்டும் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒரு அவசிய தேவையாக இருக்கிறது.

உயிரிழப்பு, உடல் உறுப்புகள் இழப்பு, சொத்திழப்பு பிரதான உழைப்பாளர்களின் இழப்பு எனப் பலவகையிலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் பெரும் சிரமத்தோடு இருக்கிறார்கள்.

இவர்களுக்கு இப்போது அவசரமாகச் செய்யவேண்டியது போரின்போது கைவிட்ட பொருட்களை மீளப் பெறுவதற்கான நடவடிக்கையே. இந்த நடவடிக்கையை மேற்கொண்டாலே அவர்களுடைய இழப்புக்களின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

அரசாங்கத்தின் கொள்கை சார்ந்து சர்வதேச தொண்டர் அமைப்புகளுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆகையால் தொண்டர் அமைப்புக்களின்மூலமாகக் கிடைக்கும் உதவிகளிலும் அந்த மக்கள் பாதிப்புக்களையே சந்தித்திருக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக அரசுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளை அங்கு பல உதவிகள் தேவைப்படுகிறது. இம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூடிய அக்கறை செலுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயங்களில் கடந்த ஆண்டு சிலபகுதிகளில் மீள்குடியேற்ற, அரசு அனுமதித்திருந்தது. கடந்த வாரம் யாழ். கச்சேரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மேலும் சில பகுதிகளில் மீள்குடியேற்ற கௌரவ அமைச்சர் பசில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தார். அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். இதனால் சில பகுதி மக்கள் மிகவும் சந்தோசம் அடைந்தார்கள்.

மேலும் உயர்பாதுகாப்பு வலயங்களில் முழுமையாக மீளக்குடியேறவும் தற்காலிக முகாம்களிலும் நண்பர்கள் வீடுகளிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் மீளத் தமது சொந்தப் பிரதேசங்களில் சந்தோசமாக வாழ்ந்து தமது தொழில் துறையை மேற்கொள்ளவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். (ச-5)

# பாணின் நிறையைக் குறைத்தமை தொடர்பில்

## 24 வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

பாணின் நிறையை குறைத்து தயாரித்தமை தொடர்பான குற்றச்சாட்டில் மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குள் உட்பட்ட 24 வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பாக யாழ். நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி வழங்கப் படவுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ். நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, பற்றுச் சீட்டு வழங்காமை, நிபந்தனை அடிப்படையில் பொருட்களை விற்றமை, மின் உபகரணங்களை உத்தரவாதமின்றி விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காதவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி சமுகமளிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில நாட்களுக்கு முன்பு பொறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலைக்கு குளிர்பானங்களை விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்மை குறிப்பிடத்தக்கது. (ச-6)

# கிழக்கு மாகாண முதலமைச்சரை பதவி நீக்க முயற்சி?

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை அந்த பதவியிலிருந்து நீக்கும் பின்னணி உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் சந்திரகாந்தன் மாகாண சபையின் நிதியை செலவிட்ட விதம் குறித்து ஆராயுமாறு அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. அத்துடன் சந்திரகாந்தனின் நிர்வாகத்தில் மாகாண சபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து எதிர்காலத்தில் அரசாங்க ஊடகங்களில் தகவல்களை வெளியிடவுள்ளதாகவும் ஏற்கனவே அரச ஊடகங்களுக்கு இதுபற்றி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (எ-5)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



உங்கள் ஆற்றலின் மிகச்சிறிய பகுதியையே நீங்கள் அறிந்துள்ளீர்கள். எல்லையற்ற ஆற்றலும் நல் வாழ்த்துக்களும் உங்களுள் கடல் போலுள்ளது.

மனிதன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அவனது ஆன்மாவில் எல்லையற்ற சக்தி உள்ளது. அவன் அதை உணரும் திறத்தைப் பொறுத்தே அது வெளிப்படுகிறது.

கையால் கண்ணை மூடிக்கொண்டு யாராவது ஒளிதாருங்கள் என்று கதறுகிறோம். முழுமுட்டாள்களே! உங்கள் கண்களை விட்டுக் கைகளை எடுங்கள். செய்யவேண்டுவது அவ்வளவே.

வேதாந்தம் என்பது வெறும் கேலி கூத்தோ, வெட்டிப் பேச்சோ அல்ல. அது ஒவ்வொருவரும் அனுபவித்து அறிய வேண்டிய ஒன்று.





யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 19ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கச் செயலாளர் சா.பாஸ்கரன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் சங்கத் தலைவர் இ.பேரின்பநாயகம் உரையாற்றுவதையும் தலைவர் அங்கத்தவர் ஒருவருக்கு நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கைதானவர்களை விடுவிக்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பேராதனை பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தபோது மாணவர்கள் சிலர் முறையற்ற வகையில் நடந்து கொண்டதாகக் கூறி சந்தேகத்தின் பேரில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவத் தலைவர்கள் நால்வரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள் ஆவர்.

இவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர் ஒன்றியம் பேராதனை பல்கலைக்கழக நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியப் பேச்சாளர் உபுல் செனவிரட்ன தெரிவிக்கையில், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்தபோது அவரை மாணவர்கள் அடைத்து வைத்ததாக கூறி புதிய மாணவர்களுக்கான பகிடிவதை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு நான்கு பீடங்களைச் சேர்ந்த நான்கு மாணவத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்கலைக் கழக நிர்வாகத்திடம் கோரியுள்ளோம் என்றார்.

அதேவேளை இக் கோரிக்கையை முன்வைத்து நேற்று முன்தினம் பகல் பேராதனை பல்கலைக்கழக வீதியில் 500 மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## மட்டு. அரச உத்தியோகத்தர் மூவருக்கு விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் அரசுக்குச் சொந்தமான உலருணவுப் பொருட்களைக் கடத்தி விற்பனை செய்ய முற்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மூவரை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டு நீதவான் நீதிமன்ற நீதிபதி வீ.இராமகமலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை வெல்லாவெளி செயலகப் பிரிவுக்குட்பட்ட 13ஆம் கொலனி, சங்காபுரம் கிராமங்களைச்சேர்ந்த வறிய மக்களுக்கு வழங்குவதெற்கென ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டம் விநியோகித்த அரிசி, மா ஆகியவற்றை இவர்கள் பதுக்கி வைத்திருந்தனர்.

இவற்றை விற்பனை செய்வதற்காக ட்ரக்டரில் எடுத்துச் சென்றபோது வெல்லாவெளி பொலிஸார் இவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது நீதிப்தி இத்தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

கிராமசேவை அதிகாரி, பல நோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளர், சமாதான நீதவான் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர். (ஸ்ரீ-2)

## ஊடகவியலாளருக்கு பயிற்சிக் கருத்தரங்கு

(கொழும்பு)

நாடாளுமன்ற ஊடகவியலாளருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று நாளை திங்கட்கிழமை தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் ராஜகிரியவில் நடைபெறவுள்ளது.

இலங்கைப் பத்திரிகை சபையும் தகவல் ஊடகத்துறை அமைச்சும் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் தெரிவு செய்யப்பட்டுள்ள தலைப்புக்களில் விரிவுரை, கலந்துரையாடல் மற்றும் பயிற்சிகள் என்பன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு ரூ.2 இலட்சம் அபராதம்

(கரவெட்டி)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட துன்னாலை வடக்கைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 18 ஆம் திகதி நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த நபர் தன் வீட்டில் கசிப்பைத் தயாரித்து விற்பனை செய்ததுடன் கசிப்பு உபகரணங்கள் மற்றும் கோடாவை வைத்திருந்த குற்றத்திற்காகவே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை சமாதான நீதவான் ஜோய் மகிழ் மகாதேவன் குறித்த நபர் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 4 குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 2 இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதத்தை செலுளத்தத் தவறின் 2 வருட கால சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-4-24)

## வெள்ளவத்தையில் தமிழ் வர்த்தகரொருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் தமிழ் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கடத்தப்பட்டுள்ளார்.

வெள்ளைவானில் சென்றவர்கள் வர்த்தகரை கடத்திச் சென்றுள்ளதாக உறவி னர் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை விஹாரர் லேன் பகுதியில் வசித்துவரும் கிருஸ்ணதாஸ் ( வயது 27 ) என்ற வர்த்தகரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் வெள்ளவத்தை பிரதேசத்தில் வர்த்தக நிலையமொன்றை ஆரம்பித்திருந்தார். இந்தக் கடத்தில் சம்பவம் குறித்து தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் பொலிசார் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கரு ஜயசூரியவினால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணை வாபஸ் பெறப்பட்டது

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியவினால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணைக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்தமையினால் பிரேரணையை அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

பாராளுமன்றம் சபாநாயகர் தலைமையில் நேற்று முன்தினம் ஒரு மணிக்குக் கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் தனி நபர் பிரேரணையை கருஜெயசூரிய முன்வைத்தார்.

முன்னதாக எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய உத்தியோகபூர்வ தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரத்திற்கும் அதன் அடிப்படையில் இவற்றைப் பெற்றுக் கொள்வது மறுக்கப்படலாம் என்பதை வரையறைசெய்வதற்கும் தகவல் சுதந்திர ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கும் தகவல் அதிகாரிகளை நியமிப்பதற்கும் தகவல்களுக்கான கோரிக்கையை விடுப்பதற்குமான செயல்முறைகளை வகுப்பதற்கும் அத்துடன் [illegible]ற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்[illegible] நேர் விளைவின் கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்ட மூலத்தை முன்வைத்தார்.

இதனிடையே குறுக்கிட்ட ஆளும் கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இந்த தனிநபர் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு இடமளிக்க முடியாது என்பதுடன் இவை தொடர்பிலான சட்டமூலத்தை அரசாங்கம் தயாரித்துக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

இதனிடையே குறுக்கிட்ட ரணில் விக்கிரசிங்க மேற்படி விடயம் தொடர்பில் அரசாங்கம், எதிர்க்கட்சிகள் மற்றும் ஊடக அமைப்புக்கள் ஒன்றாக கூடி ஆராய்ந்து விரைவில் முடிவொன்றை எடுக்க வேண்டும் என்றார்.

அதற்குப் பதிலளித்த தினேஷ் குணவர்த்தன அரசாங்கம் வெளிப்படையாக இருக்கிறது.

சட்டமூலம் தயாரிக்கப்படுகின்றது என்பதால் இந்த தனி நபர் சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரி நின்றதுடன் அவசரம் தேவையில்லை. நீங்கள் அரசாங்கத்தில் இருக்கும் போது அதனை சமர்ப்பித்திருக்கலாம் என்றார்.

இதனையடுத்தே கருஜெயசூரிய தனது தனிநபர் சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார். (ஸ்ரீ-2)

## போரின்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்

### சந்திரா ஜெயரத்ன தெரிவிப்பு

இலங்கை அரசாங்கம் போரினால் தாம் நாட்டுக்கு ஏற்படுத்திய பாதிப்புகளுக்கு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என இலங்கை வர்த்தகர் ஒருவர் தெரிவித்துள்ளார். முன்னாள் சிலோன் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சந்திரா ஜெயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீளமைப்பு ஆணைக்குழுவின் முன்னாள் சாட்சியமளிக்கும் போதே அவர் இதன்னைத் தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்த காலத்தின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதல்களால் கொல்லப்பட்டனர். எனினும் அரசாங்கம் இதனை விடுதலைப் புலிகளே செய்ததாக தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும் அண்மையில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழு சாட்சியம் பெறும்போது இராணுவத்தினரின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் அதற்குரிய ஆதாரங்களை வழங்கினர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்துள்ள குறித்த வர்த்தகர் ஏந்த ஒரு நாடும் தாம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளுக்கு மன்னிப்புக் கோர வேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் ஏற்கனவே இதனைச் செய்துள்ளன. எனினும் ஏன் இதுவரையில் இலங்கை அரசாங்கத்தின் தலைவர்கள் தாம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளுக்கு மன்னிப்புக் கோரவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை யுத்தம் நிறைவடைந்துவிட்ட போதும் தொடர்ந்தும் ஆட்கடத்தல் மற்றும் முறையற்ற கைதுகள் இடம் பெறுவதாகவும் இது தொடர்பிலும் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழு தமது விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ)

# அரையிறுதியில் சாதிக்குமா தெற்கு ஆஸி.; இன்று வாரியர்ஸ் அணியுடன் மோதல்

(செஞ்சூரியன்)

சம்பியன்ஸ் லீக் தொடரின் 2-வது அரையிறுதியில் இன்று தெற்கு அவுஸ்திரேலியா, வாரியர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதில் தெற்கு அவுஸ்திரேலிய அணி சாதிக்கக் காத்திருக்கின்றது. உள்ளூர் ரசிகர்கள் முன்னிலையில் களமிறங்கும் வாரியர்ஸ் அணியும் இறுதிப் போட்டிக்கு முன்னேற கடுமையாகப் போராடலாம்.

தென்னாபிரிக்காவில் நடக்கும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இதில் இன்று நடக்கும் இரண்டாவது அரையிறுதியில் அவுஸ்திரேலிய சம்பியன் அணியான தெற்கு அவுஸ்திரேலியா தென்னாபிரிக்காவின் இருபது-20 தொடரில் கிண்ணம் வென்ற வாரியர்ஸ் அணியை எதிர்கொள்கின்றது.

**வலிமையான துடுப்பாட்டம்**

இத் தொடரில் பங்கேற்ற 10 அணிகளில் பங்கேற்ற நான்கு லீக் போட்டிகளிலும் வென்ற அணி என்ற பெருமை தெற்கு அவுஸ்திரேலியாவுக்கு உண்டு.

இதற்கு அணியின் தலைவர் கிலிங்கரின் துடுப்பாட்டம் தான் முக்கிய காரணம். இதுவரை 213 ஓட்டங்கள் எடுத்து முதலிடத்தில் உள்ள இவர் இன்று கைகொடுக்கலாம்.

தவிர ஹரிஸ், பெர்குசன் மற்றும் போர்காஸ் போன்றவர்களும் அணியின் ஓட்டங்கள் குவிப்புக்குத் தயாராகவுள்ளனர்.

**சிறப்புப் பந்து வீச்சு**

அணியின் வேகப் பந்து வீச்சுக்கு முன்னணி வீரர் ஷோன் டெய்ட் தலைமை ஏற்றுள்ளார். இதுவரை 6 விக்கெட் வீழ்த்தியுள்ள இவருக்கு இத் தொடரில் 9 விக்கெட் சாய்த்துள்ள சக வீரர் கிறிஸ்டியனும் உதவுகின்றார்.

தவிர பட்லாந்து, ஓ பிரையன், பெய்லி என அவரவர் தங்கள் பொறுப்புணர்ந்து அணியின் வெற்றிக்குப் பாடுபடுகின்றனர்.

இன்றும் அவர்கள் இதைத் தொடரும் பட்சத்தில் எளிதாக இறுதிப் போட்டிக்குள் நுழையலாம்.

**உள்ளூர் பலம்**

வாரியர்ஸ் அணிக்கு பங்கேற்ற 4 போட்டிகளில் சென்னையுடன் மட்டும் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. இருப்பினும் அதிக ஓட்டங்கள் குவித்த (191) அணித் தலைவர் டேவே ஜேக்கப், பவுச்சர் (109) மற்றும் மற்றொரு ஆரம்ப வீரர் பிரின்ஸ் (99) போன்ற வீரர்கள் அணியின் துடுப்பாட்டத்திற்கு முதுகெலும்பாகவுள்ளனர்.

ஆனால் போத்தா, பிரிஸ், இம்ரான் மற்றும் திசன் ஆகியோர் நடுத்தர வரிசை. பின் வரிசை தடுமாறுவது அணிக்கு பின்னடைவு தான்.

**சாதிப்பாரா திரான்**

வேகப் பந்து வீச்சில் மிகவும் சிக்கனமான பந்து வீச்சை வெளிப்படுத்துவது மட்டுமன்றி இதுவரை 7 விக்கெட் சாய்த்துள்ள திரான் இன்றும் சாதித்துக் காட்ட வேண்டும்.

சென்னைக்கு எதிராகக் கலக்கிய கிருஷ், நிடினி மற்றும் டிசாட் சொபேயும் நம்பிக்கை தரலாம். சுழல் பந்து வீச்சில் ஜோகன் போத்தா தெற்கு அவுஸ்திரேலிய அணிக்கு சிம்ம சொப்பனமாக இருப்பார். இவருக்கு நிக்கி போயேவின் ஒத்துழைப்பும் கிடைத்தால் ஓட்டங்கள் குவிப்புக்கு அணை போட முடியும்.

**யாருக்கு வாய்ப்பு**

வாரியர்ஸ் அணி உள்ளூரில் விளையாடுவது மிகப் பெரும் பலம். இரசிகர்களின் ஆதரவு இந்த அணிக்குத்தான் கிடைக்கும். அதே நேரத்தில் பலம் வாய்ந்த தெற்கு அவுஸ்திரேலியாவும் கடுமையாகப் போராடும் என்பதால் அனல் பறக்கும் ஆட்டத்தை எதிர்பார்க்க



# ஆசிய மண்ணிற்குப் படையெடுக்கும் முன்னணி கிரிக்கெட் அணிகள்



இந்திய துணைக் கண்டத்தில் உலகக் கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் ஆரம்பம் இன்னும் சில மாதங்களேயுள்ள நிலையில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட அணிகள் ஆசிய மண்ணில் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ளன.

இதன்மூலம் ஆசிய மைதானங்களுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து உலகக் கோப்பை (50 ஓவர்) கிரிக்கெட் தொடரை அடுத்த ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நடத்தவுள்ளன.

இதற்காக ஒவ்வொரு அணிகளும் வீரர்களைத் தயார்படுத்தி வருகின்றன. தவிர சில அணிகள் ஆசிய மண்ணில் டெஸ்ட், ஒரு நாள் தொடரில் விளையாடத் திட்டமிட்டுள்ளன.

தற்போது இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கின்றது.

இதேபோல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணி 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கின்றது.

அதன் பின் எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியாவில் 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. இது குறித்து நியூசிலாந்து அணித் தலைவர் டானியல் விக்டோரி கூறியதாவது,

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முன் ஆசிய மண்ணில் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இதன்மூலம் உலகக் கிண்ணத் தொடருக்கு வீரர்களைத் தயார்படுத்திக் கொள்ள முடியும்.

தவிர ஆசிய தட்பவெப்ப நிலை மைதானத்தின் தன்மைக்கேற்ப பயிற்சி மேற்கொள்ள முடியும். பங்களாதேஷ் இந்தியாவுக்கு எதிரான தொடரை, உலகக் கிண்ணத் தொடருக்குச் சிறந்த பயிற்சியாகக் கருதுகின்றேன்.

உலகக் கிண்ணத் தொடரில் கிண்ணம் வெல்வது நியூசிலாந்து அணியின் கனவாகவே நீடிக்கின்றது.

இம் முறை ஆசிய மண்ணில் நடக்க இருப்பதால் தேவையான பயிற்சி மேற்கொண்டு கிண்ணத்தைக் கைப்பற்றப் போராடுவோம்.

சமீபத்தில் இலங்கையில் நடந்த முத்தரப்புத் தொடரில் நியூசிலாந்து அணியின் பலம் பலவீனம் குறித்து நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

இதற்கு ஏற்ப பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுக்கு எதிரான தொடருக்கு வீரர்களைத் தேர்வு செய்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை தொடரில் விளையாடாத பிரண்டன் மக்குலம், ஜெசி ரைடர், ரோஸ் ரெய்லர், ஸ்கொட் ஸ்டைரிஸ், மில்ஸ் உள்ளிட்டோர் இம்முறை பங்கேற்பார்கள் என நினைக்கின்றேன்.

ஆசிய பயணத்தை நியூசிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டியாகக் கருத்தில் கொண்டு விளையாடும். இவ்வாறு விக்டோரி கூறினார்.

# ஐ.பி.எல். ஏலத்தில் புதிய நடைமுறை அணி உரிமையாளர்களும் வீரர்களும் அதிருப்தி

(சென்னை)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) இருபது-20 தொடர் ஆரம்பமாகி மூன்று ஆண்டுகள் (2008-2010) முடிந்து விட்டது.

அத்துடன் மூன்று ஆண்டுக்கான வீரர்களின் ஒப்பந்த காலமும் முடிபடைந்தது. இதனால் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள (2011) ஐ.பி.எல். தொடருக்கான புதிய ஏலம் எதிர்வரும் நவம்பரில் நடக்கவுள்ளது.

இந்த ஏலத்தில் சில புதிய விதிமுறைகளை ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது. இது அணியின் உரிமையாளர்கள் மற்றும் முன்னணி வீரர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் இருபது-20 தொடர் நடந்து வருகின்றது. 4-வது தொடர் அடுத்த ஆண்டு நடக்கவுள்ளது.

இதுவரை 8 அணிகள் மட்டுமே இருந்தன. தற்போது புனே, கொச்சி என்ற இரண்டு அணிகள் புதிதாக இணைந்துள்ளன.

**புதிய ஒப்பந்தம்**

முதன்முறையாக ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகிய போது மூன்று ஆண்டுகளுக்கு 2008-2010 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

தற்போது இந்த ஒப்பந்த காலம் முடிபடைந்து விட்டது. 4-வது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் நவம்பரில் நடக்கவுள்ளது.

இதில் புதிய விதிகளை ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

**4 வீரர்கள்**

புதிய விதியின்படி இதுவரை விளையாடி வந்த 8 அணிகளும் தங்கள் அணிகளில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள வீரர்களில் 4 பேரை மட்டுமே நிரந்தரமாக வைத்துக் கொள்ள முடியும். மற்ற வீரர்கள் ஏலத்தில் கலந்து கொள்வர் என அறிவித்துள்ளது.

இதற்கு ஐ.பி.எல். அணியின் உரிமையாளர்கள் மற்றும் முன்னணி வீரர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது,

கடந்த 3 ஆண்டுகளாக சிறப்பான வீரர்களைத் தேர்ந்தெடுத்துத் தற்போது ஐ.பி.எல். அரங்கில் வலிமையான அணியாக உள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி.

இந் நிலையில் அடுத்த ஆண்டுக்கான ஏலத்தில் 4 வீரர்களை மட்டும் அணியில் வைத்துக் கொள்ள ஐ.பி.எல்.நிர்வாகம் அனுமதியளித்துள்ளது.

இதனால் மற்ற வீரர்கள் ஏலத்தில்கலந்து கொள்ள நேரிடும். மும்பை அணியும் உடைந்து விடும். இது துரதிர்ஷ்டவசமானது.

ஒவ்வொரு வீரரும் தாங்கள் இதுவரை விளையாடி வந்த அணியில் இடம்பெற வேண்டும் என விரும்புவர். இவ்வாறு சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

**சம்பளப் பிரச்சினை**

சர்வதேச போட்டிகளில் அனுபவம் இல்லாத வீரர்களுக்கு அடுத்த ஆண்டு நடக்கவுள்ள தொடரில் புதிய சம்பள முறையை நிர்ணயித்துள்ளது ஐ.பி.எல். அமைப்பு.

அதாவது இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நடந்த மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் 11 போட்டிகளுக்குக் குறைவாக விளையாடிய வீரர்கள் புதிய ஏலத்தில் பங்கேற்க முடியாது.

இவர்களுக்கு முதல்தரப் போட்டிகளில் அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்க முடிவு செய்துள்ளது. கடந்த 2005-2006 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்போ முதல்தரப் போட்டிகளில் விளையாடியிருப்பின் அந்த வீரருக்கு ஆண்டுக்கு ரூபாய் 30 இலட்சம் சம்பளம் நிர்ணயித்துள்ளது.

2007-2009 வரை முதல் தரப்போட்டிகளில் விளையாடியிருந்தால் அவர்களுக்கு ரூபாய் 20 இலட்சமும் 2009-2010 ஆம் ஆண்டு முதல்தரப் போட்டிகளில் அறிமுகம் கண்ட வீரர்களுக்கு ரூபாய் 10 இலட்சமும் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இது ஐ.பி.எல்.அணி உரிமையாளர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டும் முதற்தரப் போட்டிகளில் அனுபவம் இல்லாத வீரர்கள் குறைவான சம்பளத்தைப் பெறநேரிடும்.

அதே சமயம் முதல்தரப் போட்டிகளில் அதிக அனுபவம் பெற்று ஐ.பி.எல். தொடரில் சொதப்பி வரும் வீரர்கள் அதிக சம்பளம் பெற நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. செயலாளர்–ஜனா...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமெரிக்காவின் நியூயோர்கிலுள்ள ஐ.நா.அலுவலகத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனை நேற்று நேரில் சந்தித்து உரையாடியுள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றன என்று கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனையைப் பெற ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிபுணர் குழு அமைக்கப்பட்ட பிற்பாடு இரு தலைவர்களும் சந்தித்துப் பேசி இருக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். ஐ.நாவின் 65 ஆவது கூட்டத்தொடர் 22 ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமானது. இக்கூட்டத் தொடரின்போதே இச்சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, அவர்களுக்கான நிவாரண விநியோகம் என்பன குறித்தும்,இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யும் [illegible] மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள்,

ஐ.நா.செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்ள அனுமதித்தல் போன்றன குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடனான இச் சந்திப்பில் அமைச்சர் ஜி.எல். பீரிஸ்,நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ,ஸ்ரீ ரங்கா உட்பட குழுவினரும் கலந்து கொண்டனர். (ச–5)

## அமெரிக்காவில் வழக்கு விசாரணை

(வாஷிங்டன்)

இலங்கையில் தொழில் உறவுகள் மீறப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் அன்டன் மார்கஸ் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச–5)

# ‘தனி ஈழம்’ என்ற...

விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த 1992ஆம் ஆண்டு முதலில் தடைசெய்யப்பட்டது.

அதன்பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய அரசு அத்தடையை நீடித்துவருகிறது.

அதன்படி கடந்த மே 14–ம் திகதி இது தொடர்பான விசாரணை வெளியிடப்பட்டது.

அந்த ஆணை உள் நீதிமன்றத்தில் உறுதி செய்யப்படவேண்டும் என்பது நடைமுறை.

அதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த விசாரணையில் வைகோ ஆஜரானார்.அதற்கு தமிழக அரசு வழக்கறிஞர்தனஞ்ஜெயன் ஆட்சேபம் தெரிவித்தார்.

அதையடுத்து முறைப்படிவழக்கறிஞர் மூலம் ஆஜராகுமாறு நீதிபதி விக்ரம்ஜித் சென் வைகோவுக்கு உத்தரவிட்டார்.

அதையடுத்து நேற்று விசாரணை நடந்த போது, வைகோ முறைப்படி மனுத்தாக்கல் செய்தார்.ஆனால் தனி வழக்கறிஞரை வைக்காமல் அவரே வாதாடினார்.

தமிழ்நாட்டையும் சேர்த்து தனி ஈழம் அமைக்க புலிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்று தடையுத்தரவுக்கான காரணமாக அரசாங்கம் குறிப்பிட்டிருப்பது அப்பட்டமான பொய் என்று வாதிட்டார் வைகோ.

ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரோ,செயலாளரோ,நிர்வாகியோ இல்லாத வைகோ அதற்காக நீதிமன்றில் வாதாட முடியாது என்று தமிழக அரசு வழக்கறிஞர் தனஞ்ஜெயன்,மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சந்திர ஹோசு ஆகியோர் வலியுறுத்தினார்கள்.

தான், புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் தனி ஈழம் என்ற அவர்களது கொள்கையை ஆதரிப்பதாக வைகோ தெரிவித்தார்.இதையடுத்து புலிகள் சார்பாக வைகோ ஆஜராக முடியுமா என்பது குறித்த தீர்ப்பை ஒத்திவைப்பதாக தெரிவித்த நீதிபதி,அடுத்த விசாரணை ஒக்டோபர் 5–ம் திகதி சென்னையில் நடைபெறும் என்று அறிவித்தார். (ச–5)

# எந்தவொரு பயங்கர...

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எந்தவகையிலும் இடமளிக்கப்பட மாட்டாது.

சர்வதேச ஊடகங்களினால் வெளியிடப்பட்டுவரும் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளைதகவல்களைபகிர்ந்து கொள்ளும் ஏற்பாட்டுடன் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதனால் இலங்கை உயர் தரத்திலான புலனாய்வு சேவையைக் கொண்டுள்ளது. என அரசாங்கம் கூறியுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் காணப்படும் பயங்கரவாத செயல் யாவுமே இந்த சேவையினால்கண்டுபிடிக்கப்படும்.

இந்தியாவுக்குள் இலங்கையூடாக நுழைவதற்கு திட்டமிட்டவாறு 200 லஹ்ஷர் ஈ தொய்பா உறுப்பினார்கள் இருப்பதான அமெரிக்காவினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட அறிக்கை பற்றிய கேள்விக்கு பதில் கூறும் முகமாக அரசாங்க பேச்சாளரான .கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவுடன் நாம் தெளிவான புரிந்துணர்வைக் கொண்டுள்ளோம். இணைந்த கண்காணிப்பு நடவடிக்கைகள்,தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்கிறோம். இப்பிராந்தியத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை வேறொருவரையும்விட இந்தியா நன்கறியும். எனவே எந்த நடவடிக்கையும் கண்டுபிடிக்கப்பட்டு விபரங்கள் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என அமைச்சர் ரம்புக்வெல கூறினார். (ச–5)

# புதிய தேர்...

துள்ளார்.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி தற்போதைய தேர்தல் ஆணையாளர் ஓய்வுபெற்றிருக்க வேண்டும். தேர்தல் ஆணைக்குழு செயற்படாத காரணத்தால் அவரால் ஓய்வு பெற முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் எப்போது ஓய்வு பெறுகிறார்? அவருக்கு ஓய்வு வழங்காமை அவரது அடிப்படை உரிமைகளைமீறுவதாகஅமையாதா? என தயாசிறி ஜயசேகர சுட்டிக் காட்டியுள்ளார். (ச–5)

# முருகண்டி பிள்ளையா...

ஹோட்டலின் திறப்பு விழாவை உடனடியாக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு ஆங்கிலத்தில் கடிதம் ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அரசு, ஹோட்டல் அமைத்திருக்கும் கட்டிடத்தை கட்டாயம் பாரமெடுத்து யாத்திரிகர் விடுதியாக மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கட்டிட உரிமையாளருக்கு போதுமான இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் ஆலோசனை கூறி உள்ளார்.

வேண்டுமாயின் ஆலயத்தில் இருந்து தொலைவில் புதிதாக ஹோட்டல் ஒன்றை அமைக்கின்ற மைக்கு அரசு இக்கட்டிட உரிமையாளருக்கு அனுமதி வழங்கலாம் என்றும் ஆனால் அந்த ஹோட்டலில் மாமிசம் மதுபானம் போன்றவற்றின் வாடை கூட இருக்கக் கூடாது என்கிற நிபந்தனையுடனேயே இவ்வனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் கோரியுள்ளார். (ச–5)

# எதிர்க்கட்......

நாயகருக்கு வழங்கியுள்ளார்.

ஆனால் எம்.ஏ.சுமந்திரன் தான் இந்த நியமனத்தை ஏற்கப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.

18ஆம் திருத்தத்தின்படி சபாநாயகர், பிரதம மந்திரி,எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நாடாளுமன்ற சபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாக இருப்பர்.

சுமந்திரனுக்கு பதிலாக இன்னொருவரை நியமிக்கும்படி நான் விக்கிரமசிங்கவுக்கு எழுதவுள்ளேன். எதிர்க் கட்சித்தலைவரின் பிரதிநிதி பற்றிய பிரச்சினையை பேசித்தீர்த்த பின் இருவரின் பெயர்களை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பேன் என சபாநாயகர் கூறினார்.

பிரதமர் ஜயரட்ண நியமித்த முஸ்லிம் பிரதிநிதியின் பெயரை வெளியிட சமல் ராஜபக்ஷ மறுத்து விட்டார். இது ரவூப் ஹக்கீமா என்று கேட்கப்பட்டபோது இரு பிரதிநிதிகளின் பெயர்களையும்தான் நாடாளு மன்றத்தில் வெளியிடவுள்ளதாக அவர் கூறினார்.

பிரதம மந்திரிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் தத்தம் அபேட்சகர்களை 18ஆம் திருத்தம் அமுலுக்கு வந்த 7 நாட்களுக்குள் நியமிக்கும்படி கேட்டிருந்தும் கடைசி நேரம் வரை இருவரும் காத்திருந்தனர் என்றார் சபாநாயகர். (ச–5)


**அலுவலக தேவைக்கு இடம் தேவை**

பிரபல சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றிற்கு வீடு பகுதியாகவோ/முழுமையாகவோ வாடகைக்கு தேவை. (யாழ் நகருக்கு அண்மையில் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :-
0773535590
0773114381
(C-1278)



**A/L க்குப் பின் என்ன?**
உயர் கல்வி –தொழில் வழிகாட்டி
**இலவசக் கருத்தரங்கு!**



துறைசார் வல்லுநர்களின் நேரடி வழிகாட்டல் ஆலோசனைகளுடன்

நாளை ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி: நெல்லியடி மத்திய கல்லூரி
மாலை 3 மணி: யாழ் மத்திய கல்லூரி

ஒரு வழி மூடினால்....
திறக்கிறது ஆயிரம் வழி !

சிகரம் ஊடக கற்கைநெறி தொடர்பான விளக்கக் கருத்தரங்கு

சிகரம் ஊடக இல்லம்
கல்வி, தொழில் வழிகாட்டல் பிரிவு
இல. 221, பலாலி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்



**Organ/Violin Notes**

Organ,Guitar,புல்லாங்குழல், வீணை, வயலின், நாதஸ்வரம்போன்ற இசைக்கருவிகளில் இசைக்கக்கூடியவாறு 350 சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள் ,கிறிஸ்தவப்பாடல்கள் போன்றவற்றிற்கான இசைக் குறிப்புக்கள்(Notes) புத்தகங்களாக வெளியிடப்பட்டுவருகின்றன. Organ, Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் இன்று ஆரம்பமாகின்றன. S.S.Rajeindran, (C-1140)
karaweena Isai Manram,75,Temple Road,Jaffna.Mobile No:0777031293



புத்தூரில் முதன் முதல் ...
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு
**இலவச உயர்கல்விக் கருத்தரங்கு**

Date : 25.09.2010
Time : 04.30 pm
Venue : Institute of Computer Studies (Pvt) Ltd.
(புத்தூர்சந்தி தேவாலயத்திற்கு அருகில்)

தொடர்புகளுக்கு :–
021 7538285 / 0773276298
ICS, புத்தூர்.
(C-1279)



Diploma Courses... Ms Office
Fast Track 01 Month
Unlimited Practicals
Multimedia
Accounting
AutoCAD-2&3D
Web Development
90% Schol.
Rs.800 Upwards
கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் Free
Closing Date 26.09.2010
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction
Dip. in English
ICDL | DTP



**Obtain International recognized IT certification courses in Jaffna now!**

CCENT- Cisco certified Entry Networking Technician
2007 ஆம் ஆண்டு Cisco நிறுவனமானது CCENT எனும் புதியதொரு Certification ஐப் பூர்த்தி செய்தவர்களை சிறந்தவகையில் routers, switches போன்றவற்றை instal, operate, and troubleshoot செய்யக் கூடியவர்களாகக் கணிக்கின்றது. CCENT certification ஆனது புகழ்பெற்ற CCNA certificationனின் முதற்படி நிலையாகும். CCNA யின் அடுத்த படிநிலை CCNP ஆகும்.

Take ICND1 (640-822)Exam → Pass → CCENT Certified → Take ICND2 (640-822)Exam → Pass → CCENT Certified
Take ICND (640-822)Exam → Pass → CCENT Certified

SCJP-The Sun Certified Java Programmer
SCJP ஆனது உலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Java and Programming concepts சிறந்தவகையில் தெரிந்தவர்களாக உலகம் கணிக்கின்றது

Target audiences
After A/L, who want to be in IT field,
IT Degree followers,
If you want to succeed as a technical / programmer person in the IT industry,
Who want to select IT as their career

CCENT - Batch 2 - 26.09.2010 - (Sun) 8.30 am
CCENT - Batch 3 - 02.10.2010 - (Sat) 8.30 am
SCJP - Batch 2 - 02.10.2010 - (Sat) 12.30 pm

now!
Register Yourself

AIMS
(Academic Institute of Modern Systems)
383/14, Temple Road, Nallur Tel: 021 222 1553
Center For FOSS & LAMP


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.